# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 2 3 4 1 1

வள்ளுவர் ஆண்டு 2003, மாசி 1உ. (13-2-72) ஞாயிறு 1391 ஜுஹைஜ் 27 புத்தகம் 25 இதழ் 12


## தொலைபேசித் தந்திகளை தமிழில் அனுப்புவீர்!

தொலைபேசி மூலம் நாள்தோறும் போதிய அளவு தமிழ்த் தந்திகள் அனுப்பப்படவில்லையென்றும் அதன் காரணமாக கொழும்பு மத்திய தந்தி அலுவலகத்தில் உள்ள அப்பிரிவை மூடிவிட அஞ்சல் இலாகா திட்டமிட்டு வருவதாகவும் அறிகிறோம்.

தொலைபேசி மூலம் கொடுக்கும் உங்கள் தந்திகளை இனிமேல் தமிழில் மட்டுமே கொடுங்கள்! தமிழ் தந்திக்கு மூடுவிழா நடத்திவிடாமல் தடுங்கள்!

# அரசியலமைப்புக்கு ஆதரவாக வாக்களியாதீர்!

## தமிழ் பா. உ.க்களிடம் தமிழ் மாநாடு வேண்டுகோள்!

புதிய அரசியலமைப்புத் திட்டத்தை யாழ் நகரில் கடந்தவார இறுதியில் கூடிய தமிழ் மாநாடு முற்று முழுதாக நிராகரித்ததுடன், அரசியலமைப்புத் திட்டத்துக்கு ஆதரவாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வாக்களிக்கக் கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்தது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இத் தமிழ் மாநாட்டில் கட்சி சார்பற்ற தமிழ் அறிஞர்களும் கல்விமான்களும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. மாணிக்கவாசகர் தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டில் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திரு. கே. நேசையா, ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. தம்பித்துரை, முன்னாள் முதலை உறுப்பினர் எஸ். கனகநாயகம், மு. சிவசிதம்பரம், ஆர். என். சிவப்பிரகாசம், தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், ஆகியோர் உட்பட மற்றும் பலர் பங்கு பற்றினர்.

புதிய அரசியல் திட்டம் தமிழ் மக்களின் ஜீவாதார அடிப்படை மொழி உரிமைகளை உள்ளடக்கத் தவறியதால், அதை முற்றாக நிராகரிப்பதென்றும், அரசியலமைப்புதிட்டத்துக்கு ஆதரவாக தமிழ் பா. உ. க்கள் ஒருவரும் வாக்களிக்கக் கூடாதென்றும் மாநாடு தீர்மானித்தது.

அரசியலமைப்புத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டாம் என்று தமிழ் பா. உ. க்களை நேரில் கண்டு வற்புறுத்துவதற்கு 12 பேர் கொண்ட ஒரு குழுவையும் மாநாடு நியமித்தது.

இம் மாநாட்டில் பேசிய தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழரசுக்கட்சியின் 12 பா. உ. க்களும் ஏற்கெனவே அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து வருவதாகவும், அரசியல் நிர்ணயசபையில் தொடர்ந்தும் அங்கம் வகித்து வரும் ஏழு தமிழ் பா. உ. க்களையும் இக்குழு சந்தித்து அவர்களை வாக்களிக்காமல் தடுத்து நிறுத்தி

(2-ம் பக்கம் பார்க்க)

## கட்சித் தலைவர் தேர்தல்

### தமிழரசுத் தந்தை தரும் சிறப்புப் பேட்டி!

''கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம் என்ற பிரச்சினையை கிளப்பி கட்சியை உடைக்கலாமென்று சிலர் இப்போது எத்தனம் செய்கிறார்கள், இதில் முதல் குற்றவாளி ஒரு பத்திரிகை ஆசிரியர்.



வடக்கு மாகாணத்தவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராக்கக்கூடாதென்று பிடிவாதமாக நிற்பதாக அவர் ஒரு துபடப் பிரசாரம் செய்கிறார் இது என்ன ஆச்சரியம்? கிழக்கு மாகாணத்தவர் ஒருவர் கட்சியின் தலைவராக இருக்கும் அந்த காலத்தில் இந்தப் பிரச்சினையைகிளப்பியிருக்கிறார். அதுவும் அவர், முதலாம் முறையல்ல, இரண்

(2-ம் பக்கம் பார்க்க)

## ஜே. பி. பட்டத்தை தூக்கியெறிவோர் பட்டியல் நீளுகிறது!

சிங்கள அரசாங்கம் வழங்கிய பட்டங்களை தமிழர்கள் துறக்கவேண்டும் என்னும் இயக்கத்தை தொடக்கி வைத்து, முன்னாள் முதலை உறுப்பினர் திரு. சு. நடராசா, தமது சமாதான நீதவான், உத்தியோகப்பற்றற்ற நீதவான் ஆகிய பட்டங்களை யாழ் நகரில் நடைபெற்ற தமிழரசு மாநாட்டில் வைத்து தூக்கியெறிந்தாரல்லவா? திரு. நடராசா தொடக்கிவைத்த அந்த இயக்கம் இப்போது படுவேகமாக தமிழ்ப் பகுதியெங்கும் பரவி வருகிறது.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த பட்டம் பதவிகளை தமிழர்கள் தூக்கியெறிந்து வருகிறார்கள். இறுதியாக நமக்கு கிடைத்த செய்திகளின்படி உரும்பராயைச் சேர்ந்த திரு. வ. நடேசலிங்கமும் வசாவிளான் ஒழுக்கறிஞர் திரு. இராசநாயகமும் தமது சமாதான நீதவான் பதவிகளிலிருந்து வெளியேறி தமது விலகல் கடிதங்களை நீதி அமைச்சருக்கு அனுப்பியுள்ளனர்.

## உதறல் மொழிகள்!

''தமிழரசுக்கட்சி தனது 'யாழ் தேஷ்' கோரிக்கையின் மூலம், வட மாகாணத்துக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு அடியும் உதையும் வாங்கித்தர முயற்சிக்கிறது; சிங்கள மக்களுடன் ஒத்துழைந்து நல்லெண்ணத்தை வளர்ப்பதன் மூலமே தமிழின உரிமைகளை மீட்க முடியும்.''

—டெயிலி மிரர் (2-2-72)

●

''பிரிவினை நாசவழி—சந்தேகத்துக்கு வித்திடும் பேராபத்தையும் கொண்டுவரும்

—அமைச்சர் குமாரசூரியர் (தினகரன் 6-2-72)

●

''தமிழரசார் தமிழினம் என்ற போர்வையில் தனித்தமிழ் நாட்டுப் போராட்டத்தை ஆரம்பிக்க விரும்புவது தமிழ் மக்களை தவறான பாதையில் இட்டுச்செல்வதாக அமையும். தனித் தமிழ் நாடு போராட்டம் ஆரம்பமானால், இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் அடக்கியொடுக்கப்பட்டு நிர்மூலம் ஆக்கப்பட்டு விடுவர்.''

—அ. விசுவநாதன் (7-2-72)

## அழிவிலிருந்து தமிழைக் காக்க உடன் நடவடிக்கை தேவை!

### கலாநிதி டொன் பீற்றர் எச்சரிக்கை!

உலகின் மிகப் புராதன மொழிகளில் ஒன்று தமிழ் மொழி. பரந்த இலக்கியச் செறிவையும், சிறந்த கலாசார பாரம்பரியத்தையும் தன்னகத்தே கொண்ட இத் தமிழ் மொழி கோடானு கோடி மக்களின் தாய்மொழியாக இருந்துவருவதில் வியப்பில்லை.

''உலகின் பல நாடுகளில் வாழ்ந்துவரும் மக்களால் பேசப்பட்டுவரும் தனித்துவம் மிக்க இம்மொழி எமது நாட்டில் சிறுபான்மை இன மக்களின் தாய்மொழியாக இருக்க நேர்ந்தது [illegible] துர்ப்பாக்கியமென்றே [illegible] வேண்டும்.

''விஞ்ஞான, தொழில்நுட்பத்துறைகளில் பயிலும் தமிழ் மாணவர்களில் கல்

(11-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் சட்ட விதிகளுக்கும் அதோகதி!

புதிய அரசியல் திட்டத்தின் கீழ் 1966ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டவிதிகள் செல்லுபடியாகாது.

மொழி சரத்து பற்றி ஆராயும் அரசியல் நிர்ணய சபைக்குழுவுக்கு டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

நகல் அரசியல் திட்ட விதிகள் இப்போது குழுநிலையில் ஆராயப்பட்டு வருவது

(2-ம் பக்கம் பார்க்க)

## 'தமிழரசாரின் கோரிக்கைகளை இனியேனும் மறுபரிசீலனை செய்க!'

### தி. மு. க. ஏடு 'நம்நாடு' கோரிக்கை!

பெரும்பாலான தமிழ் மக்களின் கட்சியான தமிழர [illegible] [illegible] டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவது என்பது இலங்கை அரசுக்கு இயலாத காரியமென்றும், எனவே தமிழரசுக்கட்சியின் கோரிக்கைகளை இனியேனும் அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் தமிழ் நாடு தி. மு. கழகத்தின் அதிகார பூர்வ ஏடான 'நம்நாடு' கருத்துத் தெரிவித்துள்ளது.

(2-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# டெயிலி மிரரின் பத்திரிகா (அ)தர்மம்!

தமிழரசுக் கட்சி எந்த ஒரு அரசியல் முடிவை எடுத்தாலும் இந்நாட்டில் ஒரு சிலருக்கு 'காக்காய் வலிப்பு' ஏற்பட்டு விடுவது வழக்கம். ஐயோ ஆபத்து தமிழரசுக்கட்சி இன வெறியைத் தூண்டுகிறது; வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு அடியும் உதையும் வாங்கித்தரப் போகிறது; என்றெல்லாம் அரற்றத் தொடங்கிவிடுவார்கள் இவர்கள்!

தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ் நிலம், தமிழ் கலை கலாசாரம், இவற்றின் எதிர்கால சுபீட்ச வாழ்வை விட— இவையெல்லாம் அழிந்துபடாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்பதை விட—நலுங்காமல் குலுங்காமல், உதைத்தாலும், உதையை வாங்கிக்கொண்டு தென்னிலங்கையில் தங்கள் சுகபோக வாழ்வை பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்பது ஒரு சில அடிமைத்தமிழர்களின் ஆவலாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகளும் எண்ணங்களும் இந்தக் 'கறுவாக்காட்டு' தமிழர்களுக்கு உடன்பாடானதாக இருப்பதில்லை—

எனவேதான் தமிழரசுக்கட்சி எடுக்கும் முடிவுகள், தங்கள் சுகபோக வாழ்வை பாதிக்கப் போகிறது என்று இந்த 'கறுவாக்காட்டு' தமிழர்கள் உணரும்போது குய்யோ முறையோ என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிடுகிறார்கள்—

அடிமைகளாக வாழ்ந்தாலும்—தங்கள் சுகபோகத்தை இழக்க விரும்பாத 'கறுவாக்காட்டு' தமிழர்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் ஏடுதான் 'டெயிலி மிரர்' இந்தப் பத்திரிகைக்கு தமிழரசுக்கட்சியை திட்டுவது என்றால் ஒரே குஷி!

தமிழரசுக் கட்சி 'யாழ்தேஷ்' கேட்பதாகவும் இதனால் தென்னிலங்கைத் தமிழர்கள் கொடுமைக்கு ஆளாகக் கூடுமென்றும், சிங்கள மக்களுடன் நல்லெண்ணத்தை வளர்ப்பதன் மூலமே பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்றும் 'டெயிலி மிரர்' அண்மையில் ஓர் ஆசிரியத் தலையங்கம் எழுதி தமிழரசுக்கட்சியை காரசாரமாக திட்டித் தீர்த்திருக்கிறது:

தமிழரசுக் கட்சி தன்னுடைய சிறப்பு மாநாட்டின் மூலம்,

சிங்களமொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே அந்தஸ்து தமிழ்மொழிக்கும் அளிக்கப்படவேண்டுமென்றும்,

இந்நாட்டு அரசாங்கம் மதசார்பற்றதாகப் பிரகடனம் செய்யப்படவேண்டுமென்றும்

இந்நாட்டை தமது தாயகமாக கொண்டிருக்கும் தமிழ் மக்கள் எல்லோரதும் முழுமையான குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் என்றும்,

தமிழ் மக்களின் பாரம்பரியமான தாயகத்தில் தமிழ்த்தேசிய இனத்தின் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்படவேண்டுமென்றும்,

திட்டவட்டமாகக்கோரியிருக்கிறது. சனநாயக பூர்வமான—நீதி நியாயமான இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அரசுக்கு இடித்துக் கூற வக்கற்ற—திராணியற்ற 'டெயிலி மிரர்' ஏடு இல்லாத 'யாழ்தேஷ்' கோரிக்கை பற்றி இல்டல் செய்து எழுதி அரசாங்கத்திடம் 'நல்ல பிள்ளை' பட்டம் பெற முயன்றிருக்கிறது!

கடந்த 15 ஆண்டுகாலத்தில், தமிழரசுக்கட்சி தமிழ் இனத்தின் இழந்த உரிமைகளை மீட்பதற்கு பல தடவைகளில் தனது நல்லெண்ணக்கரங்களை ஆட்சியாளர்களுக்கு நீட்டியிருக்கிறது. ஆட்சிக்கு வந்த எல்லாச் சிங்களக் கட்சிகளுடனும் ஒப்பந்தம் எழுதியும், ஒத்துழைப்பு நல்கியும் கடைசி வரை முயன்று பார்த்திருக்கிறது. ஆனாலும் முடிவில் கண்டது ஏமாற்றம்தான்!

அரசியல் நிர்ணயசபைக்கு வரும்படி பிரதமர் அழைத்த நேரத்தில், தமிழரசுக்கட்சி அதில் கலந்துகொள்ளமுடியாது என மறுத்திருக்கலாம்; ஆனாலும் தனது நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டும் வகையிலேயே அந்த அழைப்பை ஏற்று, அரசியல் நிர்ணயசபைக்கு சென்று, தமிழினத்தின் உரிமைகளுக்காக அங்கு வாதிட்டது தமிழரசுக் கட்சி.

**நல்லெண்ணம், நட்புறவு என்பது ஒரு பக்கத்தில் இருந்தால் மட்டும் போதாது; மறுபக்கத்திலும் இருந்துவரவேண்டும். ஆளுங்கட்சியின் பக்கத்தில் ஒரு துளி நல்லெண்ணமாவது இருந்திருந்தால், தமிழரசுக் கட்சி அரசியலமைப்பு வரைவு அடிப்படைத் தீர்மானங்களுக்கு கொண்டு வந்திருந்த திருத்தங்களில் ஒன்றையாவது ஏற்றிருக்கலாமல்லவா? அதுதான் போகட்டும் — மொழியுரிமை பற்றி பிரதமரிடம் சமர்ப்பித்த குறைந்தபட்சக் கோரிக்கைகளையாவது ஏற்று அரசியலமைப்பில் அவற்றை சேர்த்திருக்கலாமல்லவா?**

எனவே நல்லெண்ணத்தை உடைத்தது — ஆளுங்கட்சியின் பெரும்பான்மை அதிகார வெறியே தவிர தமிழரசுக் கட்சியல்லவென்பதை டெயிலிமிரர் புரிந்துகொள்ளாமல் தமிழரசுக் கட்சியையே திட்டிக்கொண்டிருப்பது என்ன பத்திரிகா தர்மம் என்று நாம் கேட்க விரும்புகிறோம்—

தமிழர் இந்நாட்டின் அடிமைகள் — ஆளப்படும் இனத்தினர் — தமிழ் அடிமைமொழி — என்பதையெல்லாம் சொரணையற்று அமைதியாக ஏற்றுக்கொள்வதுதான் நல்லெண்ணமா?

## அரசியலமைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னால் போதுமென்றும் கூறினார்.

## கட்சித் தலைவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாம் முறையல்ல மூன்றும் முறையும் தலைவராக இருக்கும்போது.

இராசமாணிக்கத்தை மூன்று தடவையும் தலைவராக போட்டியில்லாமல் தெரிவு செய்தது வடக்கு மாகாணத்தவரை பெரும்பான்மையினராக கொண்ட தமிழரசுக்கட்சி. இவருக்கு முந்தி இராசவரோதயத்தை திருப்பித்திருப்பி போட்டியில்லாமல் தலைவராகியுள்ளனர் வடமாகாண மக்கள்.

"ஆகையால் இந்த முறை கிழக்கு மாகாணத்தவர்களும், வடக்குமாகாணத்தவர்களும் ஒன்று சேர்ந்து திரு. அமிர்தலிங்கத்தை தலைவராக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதற்கு காரணம் இராசதுரை, கிழக்கு மாகாணத்தவர் என்பதா, அமிர்தலிங்கம் [illegible]க்கு மாகாணத்தைச் [illegible]ந்தவர் என்பதா, [illegible]ல்ல—இரண்டு பேரிலும் [illegible]ருக்கும் தனிப்பட்ட குணா[illegible]சயங்களையும் திறமைகளையும் உணர்ந்தே இப்படிக் கேட்கிறார்கள்.

கிழக்கு, வடக்கு என்ற மனமும் இல்லை இந்தக் கேள்வியில். எத்தனையோ கிழக்கு மாகாணத்தவர்கள் அமிர்தலிங்கம் தான் தலைவராக வர வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதுபோல எத்தனையோ வடக்கு மாகாணத்தவர்கள் இராசதுரை தான் தலைவராக வரவேண்டுமென்றும் விரும்புகிறார்கள். ஒரு சில கிழக்கு மாகாணத்தவர்கள் விஷமிகள் போட்ட விஷத்தில் அகப்பட்டுப்போய் பிதற்ற தொடங்குகிறார்கள். இது எனக்கு பெரிய துக்கமான விஷயம்.

இராசதுரை கிழக்கு மாகாணத்தவர்; ஆகையினால் அவரே தலைவராக வரவேண்டுமென்று சிலர் கர்ச்சிக்கிறார்கள். இதைக் காணும்போது எனக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது.

இராசதுரை கிழக்கு மாகாணத்தவர் என்பதனால் அவரே தலைவராக வரவேண்டுமென்று சில கிழக்கு மாகாணத்தவர்கள் வேகம் கொண்டிருக்கிறார்கள். பிழையான காரணத்தைக் கொண்டு இப்படி விரும்புகிறார்கள்.

வடக்கு மாகாணத்தவர்களுக்கும், கிழக்குமாகாணத்தவர்களுக்கும் உள்ள உறவு முறிந்துவிடும் என்பதனால் இராசதுரையையே தலைவராக்க வேண்டுமென்று வடமாகாணத்தவர்கள் சிலரும் சொல்லுகிறார்கள். இது ஒரு பெரும் பிழை: இதே நியாயத்தைக் கொண்டு இராசதுரைக்காக வாக்களிப்பது கட்சியை கொல்லுவதாக முடியும். கட்டாயம் இராசதுரைக்கு வாக்களிக்கவேண்டிய நியாயங்கள் பலவுண்டு: அவர் கட்சியின் தொடக்ககால அங்கத்தவர்: அவர் சொல்லின் செல்வர்; கிழக்கு மாகாணத்து பொது மக்களுடைய மனிதர்: வட மாகாணமும் கிழக்கு மாகாணமும், ஒன்று படுவதற்கு காலாக இருந்தவர். இதையும் இன்னும் பல நியாயங்களையும் கொண்டு அவருக்கு வாக்களிக்கலாம்.

ஆனால் இராசதுரை கிழக்கு மாகாணத்தவர், இவரைத் தெரிவு செய்யாவிட்டால், கிழக்கு மாகாணத்தவர் கோபித்துக் கொண்டுபோய்விடுவார்கள் என்ற நியாயங்களைக் [illegible] [illegible] கட்சியைக்கொலை செய்வதாகும்.

## தமிழரசாரின் கோரிக்கைகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் நகரில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து 'தம்நாடு' (5-2-72 இதழில்) எழுதியிருப்பது வருமாறு:—

'இலங்கை அரசியல் அமைப்புச் சபை உருவாக்கியுள்ள புதிய அரசியல்அமைப்புச் சட்ட நகலை அடியோடு புறக்கணிப்பது...... என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி (பெடரல் கட்சி) முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்தக் கட்சியின் சிறப்பு மாநாட்டில் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் பற்றி ஆராய்ந்தபின் இந்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கை வாழ் தமிழர்களின் பெரும்பான்மையோரின் பிரதிநிதியாக இருந்து வருவதாகும் தமிழரசுக் கட்சி;

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை இக்கட்சி புறக்கணிப்பதற்கான முக்கிய காரணங்களை விளக்கி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

புதிய அரசியல் அமைப்பு, இலங்கை வாழ் தமிழ் மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கி விடுகிறது என்பதே முக்கியக் காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையின்வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களே பெரும்பான்மையினராக வாழ்கின்றனர்; அப்பகுதி, தமிழரசுக் கட்சியின் செல்வாக்கில் உள்ள பகுதியாகும்; தமிழர் வாழும் பகுதிக்குச் சுயாட்சி உரிமை வழங்க வேண்டும்' என்பது தமிழரசுக் கட்சியின் நெடுநாளைய கோரிக்கையாகும்.

இதனை அரசியல் நிர்ணய சபை புறக்கணித்து விட்டது: இதனால் அக்கட்சிமிகுந்த ஏமாற்றத்துக்கு உள்ளாகியது:

சிங்களத்தைப் போலவே தமிழும் ஆட்சி மொழியாகவும்—நீதிமன்ற மொழியாக—சம உரிமையுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்பது தமிழரசுக் கட்சியின் மற்றொரு முக்கியக்கோரிக்கையாகும்; இக்கோரிக்கையும் ஏற்கப்படவில்லை.

சிறுபான்மையோருக்குப் பாரபட்சம் காட்டும் வகையில் சட்டம் எதுவும் இயற்றப்படக்கூடாது என்று விதி இதுவரையில் இருந்து வந்த அரசியல் சட்டத்தில் உள்ளது; அந்த விதி, அரசியல் சட்டத்தில் நீக்கப்பட்டிருக்கிறது இதன் விளைவாக, சிறுபான்மையினரின் அச்சம் அதிகரித்துள்ளது.

பௌத்த மதத்தைப்பேணுவது அரசின் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது; இதனால், தமிழர்களின் சமயம் பாதிக்கப்படும் என்ற அச்சமும் மிகுந்துள்ளது.

இந்தக் காரணங்களாலேயே புதிய அரசியல் சட்டத்தைத் தமிழரசுக் கட்சி புறக்கணிக்க முடிவு செய்துள்ளது.

பெரும்பாலான தமிழ் மக்களின் கட்சியான தமிழரசுக் கட்சியைப் புறக்கணித்து விட்டுப் புதிய அரசியல் சட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவது என்பது அரசுக்கு இயலாத காரியமாகும்; எனவே, தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை அரசு இனியேனும் மறு பரிசீலனை செய்யக்கூடும் என்று நம்பப்படுகிறது.

இவர் மீது குற்றங்கள் பலவுண்டு. அப்படியே அமிர்தலிங்கத்திடமும் குற்றங்கள் பல இருக்கின்றன. இந்தக் குற்றங்களை அடிப்படை நியாயமாக கொண்டு இராசதுரைக்கு விரோதமாய் அல்லது அமிர்தலிங்கத்துக்கு விரோதமாய் வாக்களிப்பது மெச்சத்தக்கது. ஆனால் இவர் கிழக்கு மாகாணத்தவர், ஆகையால் இவருக்கு விரோதமாக வாக்களிக்க கூடாது என்றோ அமிர்தலிங்கம் வடமாகாணத்தவர், ஆகையால்அவரை ஆதரித்து -வாக்களிக்க கூடாதென்றோ எவர் அபிப்பிராயப்படுகிறார்களோ அவர் கட்சிக்கு விரோதமாக பெரிய குற்றத்தை செய்கிறார்.

இது ஒரு சின்னப்போட்டி. இதைப்பெரிதாக்கிகொண்டு கட்சி பிளக்கப் போகிறதென்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். நான் அதற்கு பயப்படவில்லை; கட்சியிலுள்ள பெரும்பான்மை மக்களுக்கு எது சரி எது பிழை யென்பதை உணர்ந்து வாக்களிக்கும் அறிவுண்டு; ஜனநாயக முறையுண்டு.

எத்தனையோ பேர் என்னிடம் கேட்டார்கள்—இந்தப் போட்டியை இப்படி விடாதீர்கள்—ஏதோ விதமாக சமாதானம் பிடித்து போட்டியை தவிர்த்து ஒருவரைத் தலைவராக தெரிவு செய்யுங்கள் என்று என்னிடம் கூறினார்கள். நான் அந்த நியாயத்துக்கு எடுபடவில்லை —கட்சி பிளக்கப்போகிறதென்ற பூச்சாண்டிக்கு நான் வெருளவுமில்லை.

"போட்டியிருப்பது சகஜம். இந்தப் பூச்சாண்டியை இப்போது கொல்லாவிட்டால், திரும்ப திரும்ப, இது வந்து கொண்டேயிருக்கும், இராசதுரையும் அமிர்தலிங்கமும் பொதுக்காரியதரிசி

(11ம் பக்கம் பார்க்க)

## தமிழ் சட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்ததே: உத்தியோக மொழிபற்றி ஆராயும் குழுக் கூட்டத்தில், அரசியல் அமைப்புதிட்டத்தில் 1958ம் ஆண்டின் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம் சேர்க்கப்பட்டுள்ளதால், அச்சட்டத்திற்கமைய 1966ம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ் மொழிப் பிரமாணங்களும் அதற்குள் அடங்குமாவென்று கேட்கப்பட்டதாம். அப்படி அடங்குமாயின், அப்பிரமாணங்களை திருத்தவோ, நீக்கவோ மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டதாம்—

இதற்குப்பதிலளித்த டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா, 1966ம் ஆண்டின் தமிழ் மொழிப் பிரமாணங்கள், அரசியல் சட்டத்துள் அடங்காது என்பதே தமது கருத்து என்றும், இது குறித்து அட்டோர்னி ஜெனரலின் முடிவைக் கேட்டு குழுவுக்கு தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்;

1966ம் ஆண்டின் பிரமாணங்களை உள்ளடக்காத தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம், உயிரற்ற உடல் போன்றதாகவேயிருக்கும்!

1966ம் ஆண்டு தமிழ் மொழிப் பிரமாணங்களுக்கு எதிராக இப்போது ஆட்சியிலிருக்கும் கூட்டணியினர் வெறிபிடித்து ஆர்ப்பாட்டம் செய்ததும் அவ்விதிகளை எதிர்த்து பொலிஸ் தடையை மீறி துப்பாக்கிக் குண்டுக்கு இரையான பௌத்த பிக்குவுக்கு கூட்டணி ஆட்சியினர் நினைவுச் சின்னம் நிறுவிப்பாராட்டியதும் தெரிந்தது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

அன்பு நண்பா,

எரிமலை குமுறிடக் கண்டேன்; வரிப்புலியின் சீற்றம் கண்டேன்; அரிமாவின் ஆர்ப்பரிப்பு கண்டேன்; பொறுமையும் பொங்கியெழுந்திடக் கண்டேன் — ஆம் நண்பா, இவை அத்தனையையும் ஒரு சேரக் கண்டேன், சனவரி 29, 30ம் நாட்களில் யாழ்நகரில் நடைபெற்ற தமிழரசு சிறப்பு மாநாட்டின்போது!

எங்கெங்கு நோக்கிடினும் உணர்ச்சி வெள்ளம்; எவரைப் பார்த்திடினும் இனத்தின் விடுதலை பற்றியே பேச்சு; செய்வோம் அல்லது செத்து மடிவோம் என்கின்ற வீராவேசம்; விடுதலை பெற்ற தமிழகத்தை நம்முடைய வாழ்நாளிலேயே அமைத்திடவேண்டும் என்கின்ற துடிப்பு! விடுதலைக்காக எதையுமே தந்திடக்கூடிய தியாக உள்ளம்; அன்னைத் தமிழின் விலங்கு ஒடித்து, அடிமைத் தனத்தை பூண்டொடு வேரறுத்து, தமிழரசு அமைத்திடுவதொன்றே நாம் இந்நாட்டில் மானமுள்ள மக்களாக வருங்காலத்தில் வாழ்ந்திடுதற்குள்ள ஒரே வழியென்பதில் அசையாத நம்பிக்கை! இவற்றையெல்லாம், மாநாட்டில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கானோர் மத்தியிலே நான் கண்டேன்! உவகை மிகக்கொண்டேன்; உளம் பூரித்தேன்!

தமிழர்கள் இந்நாட்டில், பொட்டுப் பூச்சிகளாய் புல்லைமத்தேரைகளாய், அடிமைகளாய், மொழியிழந்து, நாடிழந்து, கலை கலாசாரமிழந்து அழிந்தொழிந்துபோக மாட்டார்கள்; தங்கள் இன விடுதலையை மீட்டு தமது தாயகத்தில் தமிழரசு அமைத்து, தமிழுக்கு ஏற்றம் பெற்று தன்னினமாய் வாழ்ந்திடுவர்; இப்பணிக்கு இன்னுயிரைத் தந்திடவும், எலும்பை முறித்துக்கொடுத்திடவும், இன்னும் எண்ணரிய தியாகங்களைச் செய்திடவும் தயாராக உள்ளார்கள்; என்பதனை அரசுக்கும் அகில உலகுக்கும் அறிவித்து விட்டிருக்கிறது தமிழரசு மாநாடு!

ஆம், நண்பா, வரவிருக்கும் புதிய அரசியல் திட்டம், தமிழினத்தின் வாழ்வைப் பறித்து அழித்தொழிக்கும் சதித்திட்டம்; சிங்களத்துக்கு முடி சூடி, செந்தமிழைச் சிறுமைப்படுத்தி — இனக்கொலைக்கு வழிவகுக்கும் சனத்தனமான திட்டம்; என்பதனை தமிழ்க்குலம் தெளிவுற உணர்ந்துகொண்டுவிட்டது என்பதை நம்முடைய மாநாட்டில் வெள்ளம் போல் திரண்டிருந்த உள்ளத்தால் ஒன்றுபட்ட தமிழர் கூட்டம் தெளிவுற எடுத்துக்காட்டிவிட்டது. புதிய அரசியல் திட்டத்தில் தமிழனுக்கு தனது பகுதியைதானே ஆளும் உரிமை இல்லை; அடிப்படை உரிமைகள் இல்லை; பாதுகாப்பு இல்லை; குடியுரிமை தெளிவாக்கப்படவில்லை; தமிழுக்கு ஆட்சிமொழி, நிர்வாகமொழி, நீதிமன்ற மொழி, போதனமொழி போன்ற ஜீவாதார உரிமைகள் எதுவுமே இல்லை; மொத்தத்தில் புதிய அரசியல் சாசனம் தமிழினத்தின் மரண சாசனம்; என்பதையெல்லாம் ஒவ்வொரு தமிழனும் இன்று உணர்ந்துவிட்டான் என்பதை மாநாட்டில் கரைபுரண்டோடிய உணர்ச்சி வெள்ளம் நிலைநாட்டிவிட்டது;

மிகவும் குறுகிய காலத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்ட நம்முடைய மாநாடு, வரலாற்றுச் சிறப்புப்பெற்றுவிட்டது என்றால் அதற்குக் காரணமே மக்களும் நமது இயக்கத் தோழர்களும் காட்டிய ஆர்வமும் எழுச்சியும் தான்! தமிழினத்தின் வரலாறு காணாத நெருக்கடி மிகுந்த ஒரு காலகட்டத்தில் கூடிய நமது இயக்கமாநாடு — நமது இலட்சியப்பாதையில் ஒரு திருப்புமுனையாகவும் அமைந்துவிட்டது.

ஆம் நண்பா, எமக்குரிய பங்கினை எம்மிடமே விட்டு விடும்படி இது நாள் வரை கோரி வந்த நாம், ஒருபடி மேலே சென்று எமக்குரிய பங்கினைத் தருகிறாயா அல்லது நாமே நமது பங்கினை பிரித்து எடுத்துக் கொள்ளவா என்று கேட்கின்ற நிலையினை சிறப்பு மாநாடு தோற்று வித்திருக்கிறது!

நமது இயக்கத்தோழர்களிடையே நீறுபூத்த நெருப்பாக மறைந்து கிடந்த விடுதலை வேட்கை—காட்டாறு கரைபுரண்டோடுவது போல—பொங்கிப் பிரவாகித்து ஓடிடக் கண்டேன் நம்பொதுக்குழு கூடிய பொழுது! தமிழரசுக்கட்சி சிதறிடப் போகிறது! வடக்கு, கிழக்கு என்று துண்டுபடப்போகிறது! இதுதான் சமயமென்று தமிழினத்தை விழுங்கி ஏப்பம் விட்டுவிடலாம் என்று காத்திருக்கும் வல்லூறுகளுக்கு மரண அடியாகவும் இருந்தது நமது பொதுக்குழு உறுப்பினர்களிடையே காணப்பட்ட ஒற்றுமையும், தோழமை யுணர்வும்!

மட்டுநகரிலிருந்தும், திருமலையிலிருந்தும், வவுனியாவிலிருந்தும் மன்னாரிலிருந்தும், மலையகத்திலிருந்தும் வந்திருந்த நமது இயக்கத் தோழர்கள், எத்தனை கொள்கை உறுதியுடனும் கட்சிப்பற்றுடனும், கட்டுப்பாட்டுடனும் செயற்பட்டனர் என்பதை மாற்றார் கண்டிருப்பின் தமது சூழ்ச்சி ஒரு போதுமே பலித்திடாதென்பதை நிச்சயம் உணர்ந்திருப்பர்!

தமிழரசுக் கட்சித் தலைமைப் பதவிக்கு ஏற்பட்டுள்ள போட்டியைப் பயன்படுத்தி கட்சியை கிழக்கு, வடக்கு என்று பிரித்திடலாமென்று கனவு கண்டிடும் ஓநாய்களின் இடுப்பை யொடித்திடுவதுபோல தமது மட்டுநகர் முதல்வர் இராசதுரையுமன்றோ தனது உடல்நலக்குறைவையும் பொருட்படுத்தாது, பொதுக் குழுவில் கலந்துகொண்டு மாற்றாரின் ஆசையில் மண்ணைப் போட்டார்!

திருக்கோவில் அறப்போரணித் தலைவர் அரியநாயகம், கல்முனை தொத்தாரிஸ் கந்தையா, மூதூர் பெரியவர் ஜேசுடீ.வாஸ், பெரியபோரதீவு கி.ச. தலைவர் செல்லத்துரை, மட்டுநகர் பாலசிங்கம், மலையகத்திலிருந்து தோழர்கள் சங்கரத்தினம், கோவிந்தராஜன், மன்னார் வே. கைலாயபிள்ளை, உட்பட நூற்றுக்கணக்கான நண்பர்கள் பொதுச்சபைக்கு வந்திருந்து, மெத்த ஆர்வத்துடன் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சிறப்பித்ததைக் கண்ட பின்னரும் கட்சியின் ஒருமைப்பாடு சிதைந்திடப் போவதாக யாராவது கூறுவார்களானால் அவர்கள் இருக்க வேண்டிய இடம் நிச்சயம் மனநோய் வைத்திய சாலையே!

ஆம் நண்பா, அண்மைக்காலத்தில் நூற்றுக்கு நூறு வீதம் நமது இயக்கத்தின் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருமே தவறாமல் கலந்துகொண்டு மெத்த ஆர்வத்துடன் விவாதத்தில் பங்கு கொண்டது யாழ் நகர் சிறப்பு மாநாட்டுப் பொதுக்குழுவில்தான் என்று நினைக்கிறேன்!

மாநாட்டுக்கு வந்தோரை வரவேற்று உபசரித்து — உறைவிடமும், உணவும் கொடுத்து — ஓடியாடிப் பணியாற்றி மா

## மாநாடு எழுப்பிய முரசொலி!

நாட்டை வெற்றிபெறச் செய்திட்ட பெருமை பலருக்குண்டெனினும், ஒருவரைக் குறிப்பிட்டுச் சொல்வேன்—அவர்தான் நம்இயக்கத்தின் பழம்பெரும் தொண்டரும் யாழ் மாநகரசபை உறுப்பினருமான நண்பர் நா. த. செல்லத்துரை அவர்கள்; மாநாட்டின் வெற்றிக்கு அவர் ஆற்றிய பெரும்பணியை போற்றாதார் யாரும் இல்லை!

பொதுக்குழுவிலும், மாநாட்டிலும் தந்தை செல்வா ஆற்றிய வீர உரை நமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகும்! நறுக்குத் தெறித்தாற்போல் தந்தை சிந்திய ஒவ்வொரு சொல்லும், பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக ஒவ்வொரு தமிழனது உள்ளத்திலும் குடேற்றி நிற்கின்றன! வயோதிப பருவமெய்திடினும் சிங்கம் சிங்கமாகத்தான் இருக்கும்! அது ஒரு போதுமே சிறு நரியாக மாறாது என்பதை தந்தையின் புதிய புறநானூற்று வரிகள் நிரூபித்துக்காட்டிவிட்டன!

செல்வாவின் திட்சண்யம்மிக்க வார்த்தைகள் ஒவ்வொன்றும் நமது இரத்தம், அணு ஒவ்வொன்றிலும் கலந்து வீறு கொண்டெழச் செய்திடும் சக்தி கொண்டவை! தமிழினத்தின் அயர்வைப் போக்கி வீர உணர்வையூட்டும் 'விட்டமின்' வில்லைகள் செல்வாவின் வார்த்தைகள்! தந்தையின் பேச்சுக் கேட்டு, நெகிழாத நெஞ்சங்கள் கலங்காத கண்கள் வேகம் பெறாத உள்ளங்கள் எதுவுமேயிருக்க முடியாது!

"எனக்கு இப்போது 73 வயது ஆகிவிட்டது; எனது பேச்சு வல்லபம் குறைந்துவிட்டது; ஆயினும் தமிழரசு இயக்கத்தை துவக்கியபோது எனக்கிருந்த துணிவுமட்டும் இன்னும் அப்படியேதான் இருக்கின்றது. எத்தகைய துன்பத்தை சந்திக்கவும் நான் தயாராக இருக்கிறேன். எனது மீதிக்காலத்தை சிறையில் கழிக்கவும் நான் சித்தமாகிவிட்டேன்."

என்று செல்வா அவர்கள் கூறியபோது (செல்வா கூறிய அனைத்துக் கருத்தையும் இங்கு வெளியிடமுடியாமல் சட்டம் தடைசெய்கிறது) என் கண்கள் குளமாகின. அழுதேவிட்டேன்; நான் மட்டுமா அழுதேன்? எத்தனை ஆயிரம் தமிழ் கண்கள் கண்ணீர் விடுத்தவோ யார் கண்டார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை அவர்கள், நமது விடுதலைக்கொடியாம் மூவண்ணக் கொடியை ஏற்றிவைத்திட்ட நேரத்தில் வானமகள் ஆனந்தக்கண்ணீர் வடித்திட என் சிந்தனையில் என்ன ஓடியது தெரியுமா? விடுதலைபெற்ற வங்கத்தின் தேசியக் கொடியை வங்கபந்து ஷேக் முஜிபர் ஏற்றிவைத்த காட்சியே நினைவில் மோதிட சிந்தனைப் பறவை எங்கெங்கோ சிறகடித்தது மகிழ்ச்சியில் திளைத்தது!

நண்பா, நமது மாநாடு தீர்க்கமான சில முடிவுகளை எடுத்திருக்கிறது; திட்டவட்டமான தீர்மானத்தை தமிழ் மக்கள் முன்பு சமர்ப்பித்திருக்கிறது; நேரடியாகச் சொல்ல வேண்டியவற்றை நேரடியாகச் சொல்லியிருக்கிறது! மறைமுகமாக சொல்ல வேண்டியவற்றை மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. நமது மாநாட்டுத் தீர்மானம் உள்ளடக்கியுள்ள கருத்தை சரியாகப் புரிந்து தெளிந்து—அதைப் புரியாதவர்களுக்குபுரியவைத்திடவேண்டியதே உன் போன்ற இயக்க நண்பர்களின் உடனடிக் கடமையாகும்!

ஏட்டினில் எண்ணிடும் எல்லாவற்றையுமே எழுதிட முடியாதபடி தடை இருக்கிறது; கூட்டம்போட்டுச் சொல்லிடவும் அனுமதி கிடைப்பது குதிரைக்கொம்பு; எனவே உன் போன்ற இயக்க நண்பர்கள்தாம்—கட்சித்தோழர்கள் தாம் ஆங்காங்கு சிறுசிறு கருத்தரங்குகளையும், கலந்துரையாடல்களையும் நடத்தி மக்களிடம் நமது மாநாடு நிறைவேற்றிய தீர்மானங்களை எடுத்து விளக்கிடவேண்டும். அதுவே நம் இயக்கத்தோழர்களின் உடனடிப்பணியாகவும் அமைந்திடவேண்டும்:

நமது மாநாடு, பதினொரு திட்டவட்டமான காரணங்களைச் சுட்டிக்காட்டி தமிழினத்தை வேரோடழித்துஇனக்கொலைக்குவழிவகுத்திடும் புதிய பௌத்த சிங்கள ஒற்றையாட்சி அரசியலமைப்பை முற்று முழுதாக நிராகரித்திருக்கிறது. நாம் அரசியலமைப்பை ஏன் நிராகரித்திருக்கிறோம் என்பதை துல்லியமாக எடுத்துக்கூறும் இந்தப் பதினொரு காரணங்களையும் மக்களுக்கு தெளிவுற எடுத்து விளக்கிட வேண்டும்!

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தமிழ்ப் பிரதிநிதி கூட ஆதரித்து வாக்களிக்கக் கூடாது என்று நமது மாநாடு வேண்டுகோள் விடுத்திருக்கிறது!

தமிழ் இனம் பிரிவினைப் பாதையில் அரசாங்கத்தினால் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் இத்நேரத்தில் நான்கு முக்கிய கோரிக்கைகளை தமிழரசு மாநாடு திட்டவட்டமாக வலியுறுத்தியிருக்கிறது—

(1) சிங்களமொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே அந்தஸ்து தமிழ் மொழிக்கும் சட்டபூர்வமாக அளிக்கப்படவேண்டும்;
(2) இந்நாட்டு அரசு, மத சார்பற்றதாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டும்.
(3) இந்நாட்டைத் தமது தாயகமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் எல்லோரதும் முழுமையான குடியுரிமைக்கு உத்தரவாதம் அளித்திடவேண்டும்:
(4) தமிழ் மக்களின் பாரம்பரியமான தாயகத்தில் தமிழ்த்தேசிய இனத்தின் சுயாட்சியுரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்!

இந்த நான்கு திட்டவட்டமானகோரிக்கைகளையும் பிரகடனப்படுத்தியுள்ள தமிழரசு மாநாடு,

"தமக்கும், தமிழ் இனத்திற்கும் தம் சொந்தத் தாயகத்தில் வளமான வாழ்வை அமைத்திட, தென்னிலங்கையில் ஆட்சியாளரின் செயலினால் தம் தொழில் கல்வி வசதிகளை இழந்து வரும் தமிழ் மக்கள் தம் உடைமைகளையெல்லாம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாற்றவேண்டும்"

என்ற தீர்மானத்தின் மூலம், தமிழினத்தின் வருங்காலம் எப்படி அமையப்போகிறதென்பதையும் சூட்சுமமாக புரியவைத்திருக்கிறது!

எனவேதான் நமது இயக்கவரலாற்றில் ஒரு திருப்புமுனைக்கு வித்திட்டுள்ள மாநாட்டு முடிவுகளைமக்களுக்கு எடுத்து விளக்கி—தமிழ் இனத்தை சுதந்திர சுபீட்சப்பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு இயக்கத்தவன் ஒவ்வொருவனுக்குமே உண்டு!

சொல்லவேண்டிய அளவுக்கு சொல்லியாகிவிட்டது; எழுதவேண்டிய அளவு எழுதியாகிவிட்டது: தமிழ் நிலத்தில் தமிழினத்துக்கு தன்னாட்சி—என்பதே ஈழத்தமிழனின் இன்றைய ஒரே இலட்சியமாகி விட்டது! அந்த இலட்சியத்தின் வெற்றியிலேயே தமிழினத்தின் எதிர்காலமே தங்கியிருக்கப்போகிறது. எனவே தன்னாட்சி காண போராடுவதே—அந்தப்பணியில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வதே நம் முன்னுள்ள பொறுப்பாகும்!

நமக்கோர் ஆட்சி அமைப்போம்—அதன் மூலம் நம் இனத்துக்கு மீட்சி சேர்ப்போம்—இதுவே தமிழரசு மாநாடு எழுப்பிய முரசொலியாகும்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# இனப்பிரச்சினைகளைச் சமரசமாகத் தீர்த்திட எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி!

## "ஊசியிருக்கவும் இடம் கொடேன்" என்று கைவிரித்தது சிங்கள ஆட்சி!

### அ. நி. சபையிலிருந்து வெளியேறிய காரணங்கள்! தலைவர் இராசமாணிக்கம் தந்த விளக்கம்!!

(சென்றவாரத் தொடர்ச்சி)

தமிழர்கள் தமது சுதந்திரமான இறைமையுள்ள தமிழரசை மீள நிறுவுமாறு கோருதற்கு உரித்துடையர் ஆயினும், இலங்கையில் வாழும் சிங்களவர்களுடனும் ஏனையமக்களுடனும் முழுமையான சமத்துவ அடிப்படையில் ஓர் சமஷ்டிக் கூட்டரசின் கீழ் ஐக்கியப்படுவதற்கான தமது தீர்மானத்தை ஜனநாயக ரீதியில் தமிழ் மக்கள் காட்டியுள்ளார்கள். வெளிநாட்டார் கைப்பற்றுதற்கு முன்பிருந்த நிலைக்கு அதாவது தமிழ்மக்களின் முழுமையான சுதந்திர இறைமைக்கு—மாற்றுத்திட்டமான ஒரு சமரச இணக்கமாக தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய குறைந்த பட்சமான ஒரு திட்டம் ஒரு சமஷ்டி அரசியலமைப்பின் கீழ் தமது சுயாதீனத்தை நிலைநிறுத்துவதே ஆகும்.

#### நமது கோரிக்கைகள்

அரசியல் நிர்ணய சபைக்கு நாம் சமர்ப்பித்த பொது நிலை அறிக்கையின் சாரத்தையே மேலே கொடுத்திருக்கின்றேன். இப்பொது நிலை அறிக்கையோடு ஓர் மாதிரி அரசியல் திட்டத்தையும் நாம் சமர்ப்பித்தோம். இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களில் ஒரு சாரார் நாடற்றவர்களாகவும், ஏனையோர் சந்தேகப் பிரஜைகளாகவும், ஆக்கப்பட்டிருக்கும் இன்றைய குடியுரிமைச் சட்டங்களுக்குப் பதிலாக குடியுரிமைக்குரிய யோக்கியதாம்சங்கள் அரசியல் திட்டத்திலேயே இடம் பெற வேண்டுமென்றும் நாம் கோரினோம். இந்நாட்டில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே கட்டாய போதனு மொழியாக இருக்க வேண்டுமென்றும், சிங்களமும், தமிழும் இலங்கையின் தேசிய மொழிகளாதல் வேண்டுமென்றும், மத்திய அரசாங்கத்தினது நிர்வாக மொழியும், பதிவேட்டு மொழியும் சிங்களமும் தமிழும் ஆதல் வேண்டுமென்றும், நாட்டின் எப்பாகத்திலும் அரசாங்கத் திணைக்களங்களுடனும் ஏனைய நிறுவனங்களுடனும் தன் தாய்மொழியில் தொடர்புகொள்ளும் உரிமை ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டுமென்றும் நாம் கோரினோம். அத்துடன் நீதிமன்றங்கள் மூலம் நிலை நாட்டப்படக்கூடிய அடிப்படை உரிமைகள் அரசியல் திட்டத்தில் இடம்பெற வேண்டுமென்றும், பூரண சமதர்ம பொருளாதார அமைப்புக்கு வழிவகுக்கக் கூடிய பொருளியற் குறிக்கோள்களையும் நாம் சமர்ப்பித்த அரசியல் திட்டம் உள்ளடக்கியிருந்தது.

#### முதலாளித்துவக் கட்சியா?

இலங்கைத் தமிழரசுக் கட்சியை முதலாளித்துவக் கட்சியென்று வருணிப்பது இந்நாட்டில் முற்போக்குவாதிகளென்று தம்மை அழைத்துக்கொள்வோரின் வழக்கமாகும். நாம் அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பித்த பொருளியற்கொள்கை பற்றிய திட்டமும், நில, செல்வ உச்சவரம்புத் திட்டங்களும், உண்மை சமதர்மவாதிகள் நாமே என்பதை நடுவு நிலையில் நின்று பார்ப்போர் எவருக்கும் நிதர்சனமாகக் காட்டும். அன்றியும் உலகெங்கும் சமதர்மத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள் எல்லாவற்றிலும் அங்கு வாழும் பல்வேறு இனமக்களிடையே ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சமஷ்டி அரசியல் அமைப்பையே ஏற்றிருக்கின்றார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஆயினும் இனவாத அடிப்படையில் இயங்கிவரும் இந்நாட்டுப் போலி சோஷலிச அரசாங்கமும் ஏனைய சிங்கள அரசியற் கட்சிகளும் எமது கோரிக்கைகளை முற்றாக நிராகரித்தனர்; தமிழ் மக்களின் உரிமைகளைப் பூரணமாகப்பெறுவதற்கு இவ்வரசியல் நிர்ணய சபையில் சாத்தியமாகாது என்பது தெளிவாகத் தெரிந்த போதிலும், எமது இனத்தின் ஜீவாதாரமான உரிமைகளில் ஒரு சிலவற்றையாவது நிலைநாட்டலாம் என்ற எண்ணத்தில் நாம் அரசியல் நிர்ணய சபையில் தொடர்ந்தும் இயங்கி வந்தோம்.

#### மதசார்பற்ற அரசு

அரசியல் அமைப்புக்கு வழிகாட்டியாக 38 அடிப்படைத் தீர்மானங்கள் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டன. நாட்டின் சட்டவாக்கம், நிர்வாகம், நீதிமன்றம் ஆகியவற்றில் தமிழின் உரிமையை நிலைநாட்டுவதற்கும், இந்நாட்டில் பௌத்த மதத்திற்கு தனியிடம் அளித்து, ஏனைய மதங்களை புறக்கணிக்கும் திட்டத்தை மாற்றி, நாட்டை மதச்சார்பற்ற குடியரசாக்குவதற்கும், மக்களின் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் நாம் திருத்தங்களைச் சமர்ப்பித்தோம்.

#### குறைந்தபட்சக் கோரிக்கை

இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் அரசியற் கட்சிகளுக்கிடையில் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தி, தமிழினத்தின் சார்பில் ஏகோபித்த குறைந்த பட்சக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வல்லவையில் சில பெரியார்கள் எடுத்த முயற்சியை நான் குறிப்பிட விரும்புகின்றேன். சென்ற ஆண்டு பெப்ருவரி மாதம் 7ம் திகதி வல்வெட்டித்துறையில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி தமிழர் சுயாட்சிக்கழகம் ஆகிய நாலு கட்சிகளின் உறுப்பினர்கள் ஏகோபித்து, தமிழினத்தின் சார்பில் அரசியல் நிர்ணய சபைக்கு கீழ்க்கண்ட குறைந்த பட்சக் கோரிக்கைகளை விடுப்பதென்றும் இவையே இலங்கை வாழ் தமிழினத்தின் குறைக்கமுடியாத கோரிக்கைகள் என்று பிரகடனப்படுத்துவதென்றும் தீர்மானித்தனர். அக்கோரிக்கைகளாவன வருமாறு:—

1. சிங்களமும் தமிழும் இந்நாட்டின் அரசகரும மொழிகளாக இருத்தல் வேண்டும். அவற்றின் திட்டவட்டமான உபயோகம் பற்றிய விபரங்கள் அரசியல் சாசனத்தில் இடம்பெற வேண்டும்.

2. சிங்களமும் தமிழும் இந்நாட்டின் நீதி நிர்வாக மொழிகளாக இருக்க வேண்டும். பதிவேடுகள் முதலியவற்றில் அவ்விரு மொழிகளின் உபயோகம் பற்றிய விதிகள் அரசியல் அமைப்பில் சேர்க்கப்படவேண்டும்.

3. இலங்கையின் எப்பாகத்திலும் வாழும் சிங்களவரோ, தமிழரோ தங்கள் தாய்மொழியில் அரசாங்கத்துடன் கருமமாற்றும் உரிமை இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு பிள்ளைக்கும் சிங்களமோ, தமிழோ அவரவர் தாய்மொழியே போதனுமொழியாய் இருத்தல் வேண்டும். திறமையின் அடிப்படையில் இலவசமாக அக்கல்விக்கு வசதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

5. உயர்தரக் கல்வி நிலையங்களில் சேருவதற்கோ, அரசாங்க சேவையில் சேருவதற்கோ, தன் தாய்மொழியில் பரீட்சை எடுத்து தன் தகுதிக்கேற்ப சேரும் உரிமை ஒவ்வொருவரிற்கும் உண்டு.

6. அடிப்படை உரிமைகளிற்கு முரணான சட்டங்களை ஒட்டியோ, நிர்வாக ஒழுங்கினங்களைப் பற்றியோ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அரசியல்சாசனத்தில் அமையவேண்டும். நீதி நிர்வாகத்தில் எவ்வித அரசியல் தலையீடும் இருத்தல் ஆகாது.

7. இந்நாட்டு மக்களிடையே நிலவும் சாதியபற்றியும், சமயம் பற்றியும், இந்திய அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்கப்படவேண்டும்.

8. இலங்கைக் குடியரசு சமயச் சார்பற்ற அரசாக இருத்தல் வேண்டும். ஆனால் பௌத்தம், இந்து கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைப் பாதுகாத்துப் பேண வேண்டும்.

9. (அ) இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் அவரது தந்தை அல்லது தாய் இலங்கையில் பிறந்தவராய் இருப்பின் (ஆ) இலங்கைக்கு வெளியில் பிறந்தவராயின் அவரது பெற்றோர் இலங்கைக் குடியுரிமைக்கு தகுதியுடையவராயின்

(இ) 15-11-48 க்குமுன் இருந்து தொடர்பாக இலங்கையில் வசிப்பவரையும், இலங்கைப் பிரஜையாக இருப்பதற்கு விருப்பமுடையவராயும் இருப்பின் அவர்கள் எல்லோரையும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளும் தீர்மானம் அரசியல் அமைப்பில் சேர்க்கப்படவேண்டும். வம்சாவழிப் பிரஜைக்கும் பதிவுப் பிரஜைக்கும் எவ்வித பாகுபாடும் இருத்தல் ஆகாது. எக்காரணம் கொண்டும் எவருடைய பிரசா உரிமையும் பறிக்கப்படலாகாது.

எமது திருத்தங்களோ அனைத்து தமிழ்க்கட்சிகளின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது அம்சக் கோரிக்கைகளோ முற்றாக நிராகரிக்கப்பட்டன. இந்நாட்டை எதிர்நோக்கியிருக்கும் இனப் பிரச்சினைக்கு ஒரு சமரசத்தீர்வு காண வேண்டும் என்ற ஆர்வத்தில் மேற்கண்ட திருத்தங்களைச் சமர்ப்பித்ததோடு அமையாது அரசியல் நிர்ணயசபையில் விவாதிப்பதோடு நில்லாது, பிரதம மந்திரியையும், ஏனைய முக்கியமான அமைச்சர்கள் சிலரையும் சந்தித்து பேச்சுவார்த்தை மூலம், ஒரு தீர்வு காண முயன்றோம். இதைதொட்டி நாம் எடுத்த முயற்சிகள் பாரதக் கதையில் கிருஷ்ணன் தூதை எனக்கு நினைவூட்டுகின்றன; நாம் சமர்ப்பித்த மகஜரில் எமக்குரியபாகத்தை - ஆட்சியுரிமையைக் கோரினோம்; அது மறுக்கப்பட்டது. எமது மொழியுரிமை, குடியுரிமை, அடிப்படை உரிமை இவற்றையாவது அளிக்குமாறு திருத்தங்கள் மூலம் கோரினோம், அவையும் நிராகரிக்கப்பட்டன. தமிழ் மக்களின் ஏகோபித்த 9 அம்சக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தோம், அவையும் புறக்கணிக்கப்பட்டன. இறுதி முயற்சியாக பிரதமரையும் சில முக்கிய அமைச்சர்களையும் சந்தித்து நிர்வாக, நீதிமன்ற மொழியுரிமையையா

(11-ம் பக்கம் பார்க்க)

## சிங்களம் படிக்கும் தமிழரால் ஏற்படவிருக்கும் பேராபத்து!

தமிழை மறந்து, தமிழ் இனத்தை மறந்து சில தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிங்களம் படிப்பிக்கின்றார்கள். அநேக குடும்பங்கள் கொழும்பில் சிங்களத்தில் பயில சம்மதமாக இருக்கின்றன. அது அவர்கள் அறியாமை விசயம் தெரியாமை என்று கூறுகின்றேன். சிங்களத்தில் படித்த தமிழ் குழந்தை தமிழ் பத்திரிகை படிக்கமுடியுமா? வாசிக்கமுடியாது: தமிழ் புத்தகம் படிக்க முடியுமா? முடியாதே! தமிழ் படம் பார்க்க முடியுமா? விளங்கிக்கொள்ள முடியாதே!!!



கடைசியில் சிங்களத்தில் பயிலும் தமிழ் மாணவன் தமிழ் பெண்ணைக்கூட ரசிக்க முடியாதவனாக இருப்பான். இதை எந்த தமிழ் மகனும் ஏற்க முடியாது;

பல தமிழர்கள் இந்த சூழ்ச்சிக்குப் பலியாகிவருகின்றார்கள். இனம், மதம், மொழி, கலாசாரம் கலை இவற்றை மறந்து ஈற்றில் சிங்களவர்களாக மாறி விடுவார்கள். கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களது சமூகம் சலாகமஎன்ற சமூகம். இவர்கள் டச்சுக்காரர்களால் இந்தியாவிலிருந்து கோப்பிச் செய்கைக்கென தருவிக்கப்பக்கப்பட்டவர்கள். 1848ம் ஆண்டு சிங்கள மக்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டபோது சி. பி. டி. சில்வாவின் தகப்பனுர் அபராதத் தொகையைக் கட்ட மறுத்துவிட்டார்: தான் ஒரு தமிழன் என்ற உண்மையை சொல்லி அபராதம் கட்டவில்லை.

100 வருடங்களின் பின் நடந்ததென்ன? டச்சுக்காரர் கறுவாச் செய்கைக்கென இந்தியாவிலிருந்து கொண்டு வந்தவர்கள் சிங்களத்தைப் படித்து சிங்கள மக்களாகியதுமட்டுமல்ல தமிழர்களை அடக்கி ஒடுக்கப் போராடி வருவதையும் நீங்கள் அறிவீர்கள். 1958ல் நடைபெற்ற வகுப்புக்கலவரத்தில் சி. பி. டி. சில்வாவின் கைங்கரியம் சரித்திரம் மறக்காத ஒன்றேயாகும்.

இப்பொழுது சிங்களம் படிப்பவர்களால் இன்னும் 100 ஆண்டுகளில் மிகுதித் தமிழர்— எஞ்சியிருக்கும் தமிழர்கள் அடக்கப்படுவர். ஒழிக்கப்படுவர். அத்தனை வடக்குமுதல் புத்தளம்வரை குடி அமர்ந்தவர்கள் தமிழர்களே. நிரந்தரக் காரியதரிசியாக இருந்து ஓய்வு பெற்ற ஜே. வி. டி. பொன்சேகா அவர்களுடைய தந்தையார் ஒரு தமிழ் ஆசிரியர். ஆனால் பொன்சேகா சிங்களத்தில் படித்து சிங்களத்தில் பேசி வந்தபடியால் சிங்கள சமூகத்துடன் இணைந்துவிட்டார். 30 வருடங்களின் முன் வத்தளையிலிருந்து சிலாபம்வரை தமிழிலேயே செபம் சொன்னுர்கள். தமிழிலேயே வணங்கு குரவர்கள் பூசைசெய்தனர். இன்று பிள்ளைகள் சிங்களத்தில் பேசுகிறுர்கள். தாய், தகப்பனுர் தமிழில் பேசுகிறுர்கள். எப்படி சிங்களம் வளர்கின்றது என்பதையும் போதனு மொழியால் இனம் மாறுகிறுர்கள் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்;

—கிளிநொச்சி தமிழரசு மாவட்டக் கிளைக் கூட்டத்தில்

வவுனியா பா. உ. திரு. செல்லத்தம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பிரதாயம்

மு. சடாட்சரன்.

அன்புள்ள மாணவர்காள்! அருமை யான
ஆசிரியச் சோதரர்காள்! எம்மை விட்டுத்
தன்னூருக் கிடம்மாறிச் செல்லும் தங்கம்
என்னுதவி ஆசிரியை! அழைப்பை ஏற்று
வந்துள்ளீர் வரவேற்ருேம் வணக்கம் சொன்னேம்;
வடிவாக விளையாடி ஐந்து மாதம்
இன்புற்ற முதல்தரத்தார்க் கிடரைச் செய்தே
ஏகுகிறீர் எமக்கிது பெருத்த நட்டம்.

போகுமிடம் உங்களுக்குப் புதிய தல்ல
புத்திமதி கூறுகிறேன் கேட்டுக் கொள்க
வாகைபெற வேண்டுமெனில் வரவைக் கூட்டு!
வருத்தமெனில் லீவெடுங்கள்! வகுப்பை விட்டு
போகையிலும் குப்பைகளைப் பொறுக்கச் செய்க!
பொது மக்கள் பார்த்திடின் நீர் பொறுக்கிப்போடு!
பாகுமொழிப் பேசிருந்தால் பயனைக் காண்பீர்!
பணமிருந்தால் மதிப்புண்டு படித்தல் வேண்டும்!

பாமாலை பூமாலை பரிசுந் தந்து
பாராட்டி வாழ்த்துகிறேம் பல்லாண்டின்னும்
சேவைசெய வேண்டுகிறேம் சிறக்கும் நாடு!
சிறுவரெலாம் கைதட்டீர்! வாழ்த்துப் பாவின்
ஆசிரியர் நாகமணி மறைவாய் வாழும்
அரியகவி அவர்மொழியும் நீடு வாழ்க!
மாணவர்காள் வீடுபோய் நாளை வாரீர்!
மற்றவர்கள் சிற்றுண்டி அருந்திப் போவீர்!

★

# வாழ்வும்! தாழ்வும்!

—சோமலிங்கம்—

பயம் அற்று வாழ்வது வாழ்வு—நல்ல
பண்பில் வளர்வது வாழ்வு
அயலவர் தம்மவர் என்று—இங்கு
ஆயிரம் பேதங்கள் காட்டி
உயர்வுகொடுப்பது தாழ்வு—இந்த
உலகோர் அனைவர்க்கும் எந்தன்
தயவு கிடைக்குமென்றெண்ணும்—பெரிய
சமத்துவ எண்ணமே வாழ்வு!

மானத்தைக் காப்பது வாழ்வு—உயர்
வாய்மை பேசுதல் வாழ்வு
ஈனர்கள் எம்மவர் என்று—பேதம்
எதற்கும் காட்டியே நின்று
தானம் கொடுத்திடல் தாழ்வு—மனம்
சமத்துவ எண்ணமே கொண்டு
வானம் பாடிபோல் உள்ளம்—இந்த
வையத்தைச் சுற்றுதல் வாழ்வு!

ஏழ்மையின் கண்ணீர் கண்டு என்றும்
இரக்கம் கொள்வது வாழ்வு
தாழ்வு உயர்வுகள் சொல்லி—நல்ல
தகுதியை என்றும் மறைத்து
வாழ்வு அளிப்பது தாழ்வு—இந்த
வையக மக்களெல்லோரும்
வாழ்வு பெறவே எண்ணும்—சன்
மார்க்க நெறியே வாழ்வு!

★

# அணங்கே! கழற்றி எறி

அக்கரைப் பாக்கியன்

உணர்வு சினைப்பெடுத்து உலகில் உறுதியொடும்
வெளிப்பட்டு மிக்க வேசமாய் வருகிறது!
மண்ணகத்தில் என்றும் மதிப்புடனே வாழாமல்
எண்ணத்தில் ஏதோ உணர்ந்திங்கு உழலுகின்ருய்!
தொடரும் தமிழ் மரபை வேரறுக்கும் நினைவுடன்...நீ
இடரும் பாராமல் மினிஸ்கேட்டோ?...அணிகின்ருய்!

தெருநாய் சிலர்க்கு தெவிட்டா இனிப்பாக
உருமாறிப் போனுய்...உணராயோ பேதைகளே...?
வெட்கமி(ல்)லா இந்நிலையை மேன்மை என எண்ணி
இக்கித்திரிகின்ருய் கவர்ச்சி...அறிவோம் நாம்!
எங்கெழுந்த உணர்ச்சி, இக்கோலம் உனக்கோடி
எக்காளம் கொட்டி இழிக்க நடக்கின்ருய்!
தக்கோலம் இன்றதுவர்வாய் அதுமாறி
விப்ஸ்டிக்கைத் தேய்க்கும் நிலையில் நீபோனுய்!
துடிக்கின்ருய் என்னதுடுக்கு...மர அணில் போல்
நடிக்கின்ருய் புறத்தில்—யாவாரமோ வாழ்க்கை?

முந்நாளில் பேய்கள் முழுதும் கருமிருட்டில்
நின்ருடும் என்ற நினைவு வருகிறது!
வெற்றிலையைக் குதப்பி விளையாட்டுப் பிள்ளைக்கு,
பொக்கை வாய்ப்பாட்டி புனைந்து அறிவித்த
அக்கதை போலன்றே அணங்கே நடக்கின்ருய்
வெட்கமில்லை...கழறறு மினிஸ்கேட் உடையை இனி!

அந்நாளில் உனது அன்னை...தமிழ் மாதர்
முன்னேற்றம் கண்டார் முறத்தால் புலியடித்து!
இந்நாளில் உன்போல் இங்கிலீசுக் காறிகளால்
தன்மானம் மிக்க தமிழர் பெரும் பண்பு
செத்துப்போய் விட்டதடி சீச்சீ!...உனை நாட்டில்
வைத்திருப்பதுவும் பெரிய வம்பு ... அதனுலே
அன்பாகக் கூறுகிறேன் அணங்கே—கழற்றி எறி
கொண்டிருக்கும் இந்த கோல உடைகளினை:
எங்கே உனது இதயம் திறந்து தமிழ்
மங்கையர் போல் வாழ மனதில் திடம் கொண்டு
ஒன் றிடுவாய்...வாழ்த்தும் உலகு!



இ: சி. சுந்தரலிங்கம்,
திருகோணமலை:

கே: இங்கள மகளிர் கல்லூரி கட்டும்படி கல்வி அமைச்சிடம் கேட்டிருக்கிருரே எங்கள் தமிழ் எம். பி; உண்மையா?

ப: உண்மையல்ல—மூன்று கல்லூரிகளை ஒன்ருக இணைக்கும்படி கோரியுள்ளாரே தவிர புதிய கல்லூரி கட்டும்படி அவர் கேட்கவில்லை—

கே: "துரியோதனன் கூட்டத்தில் கர்ணன் நான்" என மட்டூநகர் முதல் எம். பி: கூறியதாக தினபதி செய்தி வெளியிட்டதே உண்மையா?

ப: தினபதியில் வெளிவந்த குறித்த செய்தி உண்மையா பொய்யா என்று திரு. இராசதுரையிடம் கேட்டபோது, அச்செய்தினை தான் படிக்கவில்லையென்றும படித்த பின்னர் கருத்துக் கூறுவதாகவும்தெரிவித்தார்.

ஃ

சு: குமரகுருசாமி,
திருகோணமலை.

கே: அண்ணன் அமிர்தலிங்கத்தைப்பற்றி இருவரிகள்...?

ப: அரசியல் வாழ்விலும் சரி, சொந்த வாழ்விலுஞ்சரி வாய்மை, நேர்மை, ஒழுக்கம், அடக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடுபோன்ற நற்பண்புகள் அனைத்தும் நிறைந்தவர். எந்தச் சந்தர்ப்பத்திலும், எவ்வித நெருக்கடியும் சோதனையும் சூழ்ந்தாலும், இலட்சியம், கொள்கையிலிருந்து அணுவளவும் வழுவாது இன விடுதலைக்காகப் போராடும் தமிழினத்தின் நம்பிக்கை நட்சத்திரம்.

ஃ

ப. ரகுநாதன்,
ஏழாலை மேற்கு:

கே: குமாரசூரியர் விடும் தவறுகளை தடித்த எழுத்தில் எழுதும் சுதந்திரன், அவர் செய்யும் நன்மைகளை எழுதாதது ஏன்?

ப: கண்களை விற்றுச் சித்திரம் வாங்கினுல் அதைப் பாராட்டவா சொல்கிறீர்கள்?

ஃ

த: சிவஞானரஞ்சன்,
யாழ்ப்பாணம்.

கே: செல்லையா குமாரசூரியர் வட்டுக்கோட்டையில் போட்டியிட்டால்?

ப: அவரது கொட்டம் அடக்கப்பட்டு விடும்!

கே: பட்டிருப்பு முன்னுள் பா. உ. இராசமாணிக்கம் தற்போழுது என்ன செய்கிருர்?

ப: அண்மையில் ஒரு விபத்தில் சிக்கி, தமிழினம் செய்த புண்ணியத்தால் சிறு காயங்களுடன் தப்பிய இராசமாணிக்கம் மிகுந்த உற்சாகத்துடன் காணப்படுகிருர். கிழக்கு மாகாணம் தந்த கொள்கைத் தங்கம் இராசமாணிக்கம் இடைத் தேர்தல் ஒன்று நடந்தால் எம். பி. யாவது நிச்சயம்!

ஃ

க. சௌந்தரராஜன்,
வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால்:

கே: தினம் தினம் பொய்களே பிரசுரிக்கும் தினபதி பத்திரிகை இந்நாட்டில் விற்பனையாகாதிருக்க தமிழரசுக் கட்சியால் நடவடிக்கை எடுக்க முடியுமா?

ப: தமிழ் மக்கள் எவரும் தினபதியை தீண்டுவதில்லையென்று சபதம் செய்தால் அதன்பின் யாரிடம் அதை விற்பனை செய்ய முடியும்?

ஃ

தி: இராசலிங்கம்,
பூநகரி:

கே: கிளிநொச்சி எட்டப்பரின் பாடு எப்படி?

ப: 'தண்ணி'யே சரணம் என்று இருக்கிருராம்!

ஃ

சிவா செல்லையா,
கோதண்டர் நொச்சிக்குளம்
வவுனியா:

கே: மனித வாழ்விலே எதனை தாங்க முடியாது?

ப: பெண்களின் அதிகாரத் திமிரை!

ஃ

பிரஸ்மஜ் 'வசந்தா',
கொழும்பு-13.

கே: அரசியல் உரிமைகளாலும், இன உரிமைகளாலும், தொழில் உரிமைகளாலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ள மலையகத்தமிழர்களுக்கு புது ஒளியைக் காண்பிக்க தமிழரசுக் கட்சியால் முடியுமா?

ப: தமிழரசுக் கட்சியால் மட்டுமே முடியும்!

கே: இக்காலத்துத்தமிழ்ப் பெண்மணிகள் பாடசாலைக்குப் படிக்கச் செல்கின்ருர்களா? அல்லது பாடசாலையைப் பழிக்கச் செல்கின்ருர்களா?

ப: படிக்கத்தான் செல்கிருர்கள்—கல்வியை அல்ல—கலவியை!

ஃ

இ. இராசகுலேந்திரன்,
பூநகரி.

கே; தமிழனுக்கு பிரதேசம் உண்டா? என்று கேட்கும் எட்டப்பன் தமிழ் தொகுதியில் போட்டியிடுவாரா?

ப: போட்டியிட்டால் செருப்புமாலை விழும் என்பது அவருக்கு தெரியும்!

ஃ

எஸ். மார்க்கண்டன்,
பம்பலப்பிட்டி.

கே: தமிழரசார் விடும் பிழைகளை உங்கள் பத்திரிகை ஏன் கண்டிப்பதில்லை?

ப: கண்டிக்க வேண்டிய நேரங்களில் கண்டித்து இருக்கிறது. பழைய சுதந்திரன்களைப் புரட்டிப்பாரும்—அப்போது புரியும்!

ஃ

ப. யமுனு,
கிரிமலை வீதி,
காங்கேசன்துறை:

கே: முஜிபுருக்கும் தந்தை செல்வாவுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை?

ப: மதத்தைவிட மொழியை பெரிதாக மதிக்கும் தன்மை, சனநாயக உணர்வு, விடுதலை வேட்கை, தியாக உள்ளம், இனப்பற்று இவை அத்தனையிலும் செல்வாவும் முஜிபுரும் ஒருவருக்கொருவர் ஈடானவர்கள்! முஜிபர் தமது மக்களின் சுயாதீனத்தை நிலைநாட்டி விட்டார்; தந்தை செல்வா அதை நோக்கி சென்று கொண்டிருக்கிருர்: இது ஒன்றே வேற்றுமை!

ஃ

கி: பிரதாபன்,
கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்:

கே: தமிழரசுக் கட்சியில் இரிக்கப்பேசி கொள்கை பரப்பும் பிரமுகர் யார்?

ப: திருவாளர் க: துரைரத்தினம் பா. உ.

கே: ஆட்சியாளர்களுக்கு தமிழரசுக்கட்சி இறுதியாக கூறுவது என்ன?

ப: எங்கள் பங்கை சமாதானமாக தருகிறீர்களா அல்லது நாமே எடுத்துக் கொள்ளவா என்பது தான்!

கே: முன்னைய முதலை உறுப்பினர் நடராசாவைப் பற்றி யாது நினைக்கிறீர்கள்?

ப: வைரம்பாய்ந்த கொள்கை வீரர்களில் அவரும் ஒருவர்!

ஃ

ஜானகி, உடுவில்.

கே: இலங்கைத் தமிழரசுக் கட்சியா? அல்லது இந்தியத் தமிழரசுக் கழகமா முதலில் தோன்றியது?

ப: ம. பொ. சி. யின் 'தமிழரசுக் கழகமே' முதலில் தோன்றியது.

ஃ

தமிழரசி,
யாழ்ப்பாணம்.

கே: யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள் சிலர் தங்கள் வட்டாரங்களுக்கு வேலைகள் செய்வதில் முயலாமல் தமது பெயர்களுக்குப் பின்னுல் இரண்டு எழுத்தைச் (ஜே. பி) சேர்ப்பதில் முயற்சியெடுத்து வேலை செய்து கொண்டிருக்கின்ருர்களே! இப்பேற்பட்ட சுயநலவாதிகளை என்ன செய்யலாம்?

ப: மாநகரசபை தேர்தல் வரும்போது 'களை' யெடுத்து விடலாம்!

ஃ

எம். ஏ. அஜீவத்,
மட்டக்களப்பு:

கே: இலங்கையில் தமிழ் பேசும் தமிழ் மக்களின் பிற்கால வாழ்வு எப்படியிருக்கும்?

ப: சுயாட்சி திருவியபின் சுபிட்சமாக இருக்கும்!

ஃ

சு: தவமலர்,
வலையிறவு:

கே: தமிழரசுக் கட்சித் தலைவர் தேர்தலில் தாங்கள் யாரை ஆதரிப்பீர்கள்? இராசதுரையையா? அமிர்தலிங்கத்தையா?

ப: தமிழினம் ஜீவமரணப் போரில் குதித்திருக்கும் இத் தருணத்தில் கட்சிக்கு தலைமைதாங்கி நடத்தும் வல்லமையாரிடம் இருக்கிறது என்று நான் கருதுகிறேனே அவருக்கே என் ஆதரவு!

கே: உங்களுக்கு குயுக்தி என்று புனைப்பெயர் தந்தது யார்?

ப: திருவாளர் வாசகர்!

ஃ

உமாசங்கர்,
நொச்சிமோட்டை:

கே: வலைவீசும் விலைமாதரை நம்பலாமா?

ப: விலைமாதரிலும் கேவலமான தமிழ்த்துரோகிகளையே சில தமிழர்கள் இன்னும் நம்புகிருர்களே...!

வெட்டிஒட்டப்பட
வேண்டிய முகவரி—
திருவாளர் குயுக்தியார்,
மே/பா சுதந்திரன்
194, ஏ- பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழ் பேசும் மக்கள்' என்ற சொல்லுக்கு பதிலாக 'தமிழ் மக்கள்' எனும் சொல்லைப் பயன் படுத்தியதன் மூலம் தமிழரசுக்கட்சி இஸ்லாமிய தமிழர்களை கைவிட்டு விட்டதாக தமிழ்த் துரோகி தினபதியார் ஒரு பிரச்சினையை கிளப்பி, இஸ்லாமியத் தமிழர்களுக்கும் ஏனைய தமிழர்களுக்குமிடையே சிண்டு முடிய முனைந்திருந்தார் 1-2-72 அத்தாணிமண்டபத்தில். அதைக்கண்டித்து தினபதியாருக்கு காரசாரமான கடிதமொன்றை எழுதியுள்ளார் மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த வை. எம். இக்பால் என்ற இஸ்லாமியத் தோழர். அக்கடிதத்தை இஸ்லாமியத் தமிழர் இயக்கத்தில் இன்று வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

# இஸ்லாமிய தமிழர் இயக்கம்

# முஸ்லிம்களும் தமிழர்களே!

## தமிழர்கள் என்று தம்மை அழைப்பதையே இஸ்லாமியர்கள் வரவேற்கின்றனர்!

## தினபதியாருக்கு இக்பால் விளக்கம்!

ஆசிரியர்,
அரசகேசரி,
தினபதி த. பெ: 1257,
கொழும்பு-12:

ஐயா,

### தமிழ் பேசும் மக்கள் தமிழர் ஆகிய விந்தை

1-2-72 தினபதியின் 'அத்தாணி மண்ட'பத்தில் மேற்படி தலைப்பில் தெரிவிக்கப்பட்ட தங்கள் கருத்து விடயமாக நான் கூற விரும்புவது.

யாழ்ப்பாணத்தில் நடந்த வார இறுதியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி சிறப்பு மாநாட்டில் 'தமிழ் பேசும் மக்கள்' என்று குறிப்பிடாது 'தமிழர்கள்' என்று குறிப்பிட்டது முஸ்லிம் மக்களைப் புறக்கணிப்பதாகும் என்பது தங்கள் கருத்து. இதன்படி முஸ்லிம் மக்கள் தங்களைத் 'தமிழ் பேசும் மக்கள்' என்று கூறுக்கொள்ள விரும்புகிறார்களேயன்றி 'தமிழர்கள்' என்று குறிப்பிட விரும்பவில்லை என்பது தங்கள் கருத்தில் உள்ளடக்கிய கருத்து.

தங்களது இந்தக் கருத்தால் முஸ்லிம் மக்கள் மகிழ்ச்சியடையமாட்டார்களென்பது ஒரு முஸ்லிமாகிய எனது கருத்து:

ஒருவன் எந்த மொழியைத் தன் தாய் மொழியாகக் கொள்கிறானோ, அந்த மொழியைக் கொண்டே அவனுடைய இனப்பெயர் பெரும்பாலும் உருவாகிறது. அல்லாமல் சமயத்தைக்கொண்டு எந்த இனமும் அழைக்கப்படுவதில்லை. ஆபிரிக்கா அரேபியா, இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேஷியா, ஆகிய நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களென்று கூறுவது மடமையிலும் மடமை: அவர்கள் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களேயன்றி இனத்தாலும் மொழியாலும் வேறுபட்டவர்கள்;

ஒரு இனத்துக்கு சமயத்தைவிட மொழிதான் முக்கியம் என்பதை சமீபத்து பாகிஸ்தான் பங்களாதேஷ் விவகாரம் நிரூபித்திருப்பதை மறந்திருக்கமாட்டீர்கள். இந்த உண்மை தங்களுக்கும் தெரியும். எங்களுக்கும் தெரியும். தாங்கள் தமிழரசுக்கட்சிசார்பான 'சுதந்திரன்' ஆசிரியராக ஒருகாலம் இருந்ததும் எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

தமிழரசுக்கட்சி மீதுள்ள தனிப்பட்ட மனத்தாபங்களை வைத்துக்கொண்டு 'முஸ்லிம்கள் கொதிக்கிறார்கள்' 'முஸ்லிம்கள் ஆத்திரமடைகிறார்கள்' 'முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்' என்று கயிறுதிரித்து முஸ்லிம்களைப் பகடைக்காய்களாகப் பாவித்துத் தமிழர்களைக் கூறுபோடாதீர்கள். 'தமிழ் பேசும் மக்கள்' என்று அழைத்தாலென்ன 'தமிழர்கள்' என்று அழைத்தாலென்ன ஒன்றுதான். இன்னும் 'தமிழ்பேசும் மக்கள் என்றழைப்பதைவிட தமிழர்கள் என்றழைப்பதுதான் சாலப் பொருத்தமானது. தமிழ்நாட்டிலுள்ள முஸ்லிம்கள் தங்களைத் தமிழர்கள் என்று கூறிக்கொள்வதிலேயே பெருமையடைகிறார்கள்; இதைவிட்டு முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டார்கள் என்பது முஸ்லிம்களை இழிவுபடுத்துவதாகும்.

தயவுசெய்து இனிமேலாவது இப்படிக் கயிறுதிரித்து எழுதித் தமிழ் மக்களைக் கூறுபோட முனையாதீர்கள் என்று தமிழ் மொழியின் பெயரால் உங்களை இருகரம் கூப்பிவேண்டுகிறேன்.

இப்படியே நீங்கள் திரித்துத் திரித்து எழுதித் தமிழ் மக்களைக் கூறுபோட முனைந்தால் ஒரு நாள் நிச்சயம் நீங்கள் திரிக்கும் கயிற்றில் நீங்களே சிக்குண்டு காலிடறுவது மல்லாமல் கழுத்தே இறுகக் கூடிய நிலை ஏற்படக்கூடும்.

இவ்வண்ணம்,

தங்கள் சிந்தனை தெளிவடைய வேண்டும் என விரும்பும்.

வை. எம். இக்பால்,
உப்புக்குளம்,
மன்னார்;

பிரதி:— ஆசிரியர் 'சுதந்திரன்' தயவுசெய்து இக்கடிதத்தை தங்கள் பத்திரிகையில்பிரசுரிக்கவும்; ஏனெனில் தினபதியார் இதைப் பிரசுரிப்பாரோ என்பது சந்தேகம்.

---

# 'தமிழ் மொழியின் முதல் பகைவர் நீங்களே!'

அரசாங்க நிருவாகம் உள்ளூர் ஆட்சி உள்நாட்டு அலுவல்கள் நீதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா அவர்களுக்கு ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் விடுக்கும் திறந்த முடங்கல்.

அன்புடையீர்,

நீங்கள் அண்மையில் யாழ் நகருக்கு வருகைதந்த பொழுது 16-1-72ல் நகர மண்டபத்தில் 'அரை மணி நேரம் தமிழில் பேசி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினீர்கள்' என 16-1-72ம் திகதி வெளியான ஈழநாட்டிதழ் கூறுகின்றது: 17-1-72ம் திகதி வெளியான ஈழநாட்டிதழில் நீங்கள் கூறியதாகப் பின்வரும் செய்தியும் காணப்படுகின்றது.

'சிங்கள தமிழ் மக்களது ஒற்றுமையைப் பலப்படுத்த நான் விரைவில் தமிழ் படித்து சித்திபெய்துவேன். ஒருதாய் பிள்ளைகளான தமிழ் சிங்கள மக்கள் ஒருவரது கருத்தை மற்றவர் அறிய முடியாமல் திண்டாடுவது மிகவும் கவலைக்குரியதாகும் எனவே நான் தமிழ் படிப்பது போல் தமிழ்ப் பெரியார்களும் சிங்களம் படிக்க முன்வரவேண்டும்;'

### தமிழில் மறுமொழி

நீங்கள் தமிழ் படித்து வருவதாகப் பிரதிநிதிகள் சபையிலும் இடையிடையே கூறினீர்கள் இப்பொழுது யாழ் நகரில் தமிழில் பேசி உங்கள் தமிழறிவின் தரத்தை மக்கள் அறியச் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது உங்களுக்குத் தமிழ் தெரியுமாகையால் நான் உங்களுக்கு எழுதும் தமிழ்க் கடிதங்களுக்கு இனிமேலாகுதல் தமிழில் மறுமொழி அனுப்புவீர்கள் என்றெண்ணுகின்றேன்.

### ஏமாற்ற நினைப்பா?

'சிங்கள — தமிழ் மக்களது ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்குத்தான் நீங்கள் தமிழ் படிப்பதாகக் கூறியிருக்கிறீர்கள்'

சிங்கள — தமிழ் மக்களது ஒற்றுமையைப் பலப்படுத்த நீங்கள் முயல்வதாக கூறுவது மகிழ்ச்சிக்குரியது. நீங்கள் தமிழைப் படிப்பதால் மட்டும் இந்த ஒற்றுமையை உண்டாக்க முடியாதென்பதை நீங்கள் இன்னும் உணரவில்லையா? தமிழ் மக்களின் உள்ளம் நிறைவுகொள்ளத் தக்கமுறையில் தமிழ்மொழி உரிமைகளை உங்கள் அரசாங்கம் கொடுத்தாலன்றி இந்நாட்டில் தமிழ் — சிங்கள மக்களது ஒற்றுமையை உண்டாக்க முடியாது என்று தமிழ் மக்களின் பிரதிநிதிகள் 1956ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து கூறிவருவதையும், தமிழ் மொழி உரிமைகளைப் பெறுதற்குத் தமிழ் மக்கள் இனைச்சிரும் போராட்டங்களும் நடந்து வருவதையும் நீங்கள் அறியாதவர்களா? உண்மை நிலைமையை உணராமல் நீங்கள் பேசுகிறீர்களா? அன்றேல் தமிழ் மக்களை ஏமாற்றி விடலாம் என்று இன்றும் எண்ணுகிறீர்களா?

### கபட வேடம்

இன்று இந்நாட்டில் தமிழ் மக்களின் தாய்மொழிப் பற்றை மதித்து அவர்களின் தமிழ் மொழி உரிமைகளைக் கொடுக்கத்தக்க முறையில் தமிழ்மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அமைச்சராகிய நீங்கள் வேலியே பயிரை மேய்வது போலத் தமிழ் மொழிச் சட்டத்தைச்செல்லாக்காசாக்கி, முன்னைய அரசாங்கம்



கொடுத்த அரைகுறை உரிமைகளையும் பறித்து தமிழில் எழுதுவோருக்கு ஆங்கிலத்தில் மறுமொழி அனுப்புவேன் என்று "அடம்" பிடித்து, தமிழ் மக்களின் வெறுப்புக்கும் வேதனைக்கும் ஆளான முதலாவது எதிரியாக இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாமலா சிங்கள — தமிழ் மக்களது ஒற்றுமைபற்றி பேசுகிறீர்கள்? குடிகாரன் மதுவிலக்கைப் பற்றிப் பேசுவ[illegible] ஒற்றுமைப்படுத்த[illegible] முயல்வதாகப் பேசுவதும் போன்றதே நீங்கள் சிங்கள

# பீலிக்ஸ் டயசுக்கு பண்டிதர் இரத்தினம் பகிரங்க முடங்கல்!

— தமிழ் மக்களது ஒற்றுமையைபற்றிப் பேசுவது. கபடம் அறியாத குழந்தைக்கு இனிப்பைக் கொடுத்து அதன் கழுத்தை நெரித்துக் கொன்று தங்கச் சங்கிலியைத் திருடுதலைப் போன்றதே நீங்கள் தமிழ் படிக்கிறேன் என்று தமிழ் மக்களுக்குக் கூறிக்கொண்டு தமிழ் உரிமைகளைப்பறிப்பது.

### தடைக்கல் நீங்களே

இந்த அரசாங்கம் விரும்பினால் இருபத்திநான்குமணி நேரத்தில் தமிழ் மொழி உரிமைகளைக் கொடுக்கலாம் என்று நான் பிரதிநிதிகள் சபையில் சுட்டிக்காட்டியுள்ளேன். நீங்கள் நினைத்தால் இதனைச் செய்ய முடியும். இதனைச் செய்யத்தக்க ஆற்றலும் அதிகாரமும் செல்வாக்கும் படைத்த ஒரே ஒரு அமைச்சர் நீங்களே. ஆனால் தமிழ்மொழி உரிமைகளைக் கொடுக்காமல் தடைபோட்டுக்கொண்டு இருப்பவரும் நீங்களே என்பதையும் தமிழ் மக்கள் மட்டுமன்றி இந்நாட்டு மக்கள் யாவரும் நன்கறிவர்.

மொழிச் சட்டங்களை நடைமுறைப்படுத்துதற்குப் பொறுப்பாயிருக்கும் நீங்கள் இன்று வரை தமிழ் மொழிச் சட்டத்தை அரைகுறையாகத்தானும் நடைமுறைப் படுத்தச் செய்தற்கு யாதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? உள்ளத்தைத் தொட்டுச் சொல்லுங்கள்! தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தைச் செல்லாக் காசாக்கிவிட்டு இந்தச் சட்டத்தை அரசியலமைப்பில் புகுத்தினால் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? தமிழ் மக்கள் எல்லோரும் மரங்களா? மண்ணாங்கட்டிகளா?

இன்று இலங்கையில் தமிழ் மொழி உரிமைகளை மறப்பவர்களின் முதல்வர் நீங்களே என்பதையும், நீங்கள் நினைத்தால் இருபத்திநான்கு மணி நேரத்தில் தமிழ் மொழி உரிமைகளை கொடுக்க முடியும் என்பதையும், நான் தமிழ் படிக்கிறேன் என்ற போர்வையில் உங்கள் ஆட்சியின் சூழ்ச்சிகளை மறைக்க முடியாதென்பதையும், தமிழர்கள் அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்ப்பதற்கும் தமிழ் மொழி உரிமைப் போராட்டத்தை மீண்டும் தொடங்குதற்கும் பெரிதும் காரணமாயிருப்பவர் நீங்களே என்பதையும், நாடறியச் சொல்லி வைக்கவே இத் திறந்த முடங்கலை உங்களுக்கு விடுக்கின்றேன்.

தமிழ் மொழி உரிமைகளைக் கொடுக்காமல் தமிழினத்தின் பகைவராக ஆகுவதால் — தமிழர்களின் தொண்டைக்குள் சிங்களத்தைப் புகுத்தி அவர்களை மெல்ல மெல்லச் சிங்களவர்களாக்க முயல்வதால் தமிழர்களை அடக்கி அடிமைப்படுத்துவதால் இந்நாட்டின் ஆட்சியில் மேலும் அதிகாரத்தைப் பெறலாம் — பிரதம அமைச்சராகலாம் என நப்பாசையால் குதிக்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# (6) திருச்சி தந்த அதிர்ச்சி!

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

**கோவை-மகேசன்**

திருச்சி விமான நிலையத்தில் நாங்கள் இறங்கியதும், அங்கு வேலைசெய்யும் ஓர் ஊழியர் ஓடி வந்து என் கையிலிருந்த 'அதை' பறித்துக் கொண்டு ஓடியதாக கூறிவிட்டு, கடந்த வாரம் முழுவதும் உங்களை 'அது' எதுவாக இருக்கும் என்கின்ற ஆராய்ச்சியில் இறக்கி விட்டு விட்டதற்காக என்னை மன்னித்துவிடுங்கள். 'அது' எது வென்பதை மேலும் 'சஸ்பென்சாக்காமல்' நேரடியாக இப்பொழுதே கூறிவிடுகிறேன்; அது தான் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரலான 'சுதந்திரன்' ஏடு.

நான் எங்கு சென்றாலும், சுதந்திரனும் கையுமாக செல்வது எனது வழக்கம்; சுதந்திரன் பத்திரிகைக்கும் எனக்குமுள்ள தொடர்பு, நான் சுதந்திரனின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னுலே ஏற்பட்ட ஒன்றல்ல. பன்னிரண்டு வயதிலிருந்தே 'சுதந்திரனுக்கும்' எனக்கும் உறவு இருந்து வந்திருக்கிறது.

ரொம்பச் சின்ன வயதிலேயே சுதந்திரன் படிப்பதில் ஆர்வமும் அக்கறையும் எனக்கு ஏற்பட்டுவிட்டது. அந்நாட்களில அமரர் வன்னியசிங்கமும், சுதந்திரன் ஏடுமே என் இரு வழிகாட்டிகள் என்று கூறினல் மிகையாகாது. அந்த நாட்களில்- எனக்கு சைக்கிள்கூட ஓடத் தெரியாத நாட்களில் - சுதந்திரன் வாங்குவதற்காக ஒவ்வொரு சனிக்கிழமை அதிகாலையும், எனது ஊரிலிருந்து கால் நடையில் ஐந்து, ஆறு மைல் தூரம் நடந்து சென்று நகரில் உள்ள பத்திரிகைக் கடையில் சுதந்திரன் வாங்கிக்கொண்டு மீண்டும் நடையிலேயே வீடு திரும்புவேன்.

ஏன் நடையிலேயே திரும்ப வேண்டும்-பஸ்ஸில் திரும்ப முடியாதா என்று கேட்டால்-சுதந்திரன் வாங்கவே பணம் கணக்காக இருக்கும்! பஸ்ஸுக்கு கொடுக்கப்பணம் ஏது?

அநேகமாக ஒவ்வொரு கிழமையும், சுதந்திரன் பார்சல் பிரித்ததும், முதலாவது பிரதி வாங்குவது நானுகத்தான் இருக்கும். பல சந்தர்ப்பங்களில் 'பார்சல்' வரும்வரை கால்கடுக்க காத்து நின்றதும் உண்டு.

இப்படிப் பத்து, பன்னிரண்டு வயதிலிருந்தே சுதந்திரனுக்கும் எனக்கும் 'காதல்' ஏற்பட்டுவிட்டது. அப்போதெல்லாம்—இதே சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராக பின்னெருகால் நான் வருவேன் என்று அணுவளவு சிந்தனைகூட என் நெஞ்சில் ஏற்பட்டதில்லை—சுதந்திரனில் அன்று வேகவேகமாக எழுதி விடுதலை உணர்ச்சியை தட்டிவிட்டவர்கள், பின்னர் திசைமாறி தடுக்கி வீழ்ந்து இனத்துரோகிகளாக மாறப்போகிறார்கள் என்றோ அத்துரோகிகளின் முதுகெலும்பை நொறுக்கி, தமிழின விடுதலை இயக்கத்தை கட்டிக்காத்து வளர்க்கும் பாரிய பொறுப்பு என் தலையில் விழும் என்றோ எதிர்பார்த்திடுவதற்கு நான் ஒரு சோதிடன் அல்லவே!

என் பள்ளிப்பருவத்தை நினைக்கும்போது, மற்ருேர் மறக்கமுடியாத சம்பவமும் என் நினைவில் பளிச்சிடுகிறது. அப்போது நான் எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறேன். அந்நாளில் தமிழை அவமதித்துவிட்டு, யாழ்நகர் வரவிருந்த அன்றைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு நடைபாவாடை விரித்து, குடை கொடி ஆலவட்டம் பிடித்து ராஜோபசார வரவேற்பு கொடுப்பதற்குஒத்துழைப்புத் தம்பிரான்கள் தடபுடலாக ஏற்பாடுசெய்திருந்தனர். அந்நேரத்தில் தமிழரசுக்கட்சியின் அன்று இளைஞர் அணி தளபதி அமிர்தலிங்கத்தின் தலைமையில் 'கறுப்புக்கொடி' வரவேற்பு கொடுத்து தமிழினத்தின் உள்ளக்குமுறலை சேர் ஜோனுக்கு எடுத்துக்காட்ட தீர்மானித்திருந்தனர்.

தளபதி அமிர்தலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற அந்தக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றுவதற்காக, வீட்டுக்கும் சொல்லிக்கொள்ளாமல் பாடசாலைக்கு செல்வது போல வந்து - பாடசாலைக்கும் மட்டம்போட்டு விட்டு தமிழரசுப் பணிமனைக்குச் சென்று கறுப்புக்கொடி பெற்று அண்ணன் அமிர்தலிங்கத்தின் தலைமையில் யாழ். மாநகரசபை முன்றிலில் கறுப்புக் கொடி பிடித்து பொலிசாரினுல் அடிபட்டதை மறக்கவே முடியாது;

இப்படியெல்லாம் செய்யும்படி என்னைத் தூண்டிவிட்டு உணர்ச்சியை யூட்டி, விடுதலை வீரனுக்கியது சுதந்திரன் தான், எனவே சுதந்திரனை என்னல் எப்படி மறக்க முடியும்?

திருச்சி மண்ணில் இறங்கியதுமே சுதந்திரனுக்கிருந்த மதிப்பையும், செல்வாக்கையும் கண்டபோது ஒருதாயின் மனநிறைவும், பூரிப்புமே எனக்கு ஏற்பட்டது. தனது பத்திரிகைக்கு மக்களிடம் இருக்கும் செல்வாக்கைக் காணும்போது ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு ஏற்படும் மகிழ்ச்சியைவிட வேறு எந்த மகிழ்ச்சியும் புத்துணர்வைத் தந்துவிட முடியாது என்பதை அனுபவபூர்வமாக நான் உணர்ந்து அனுபவித்திருக்கிறேன்.

உள்ளே சுங்கப் பரி[illegible]தனைக்காக செல்கின்[illegible]ம். என்ன ஆச்சரியம்? வி[illegible]ன நிலைய ஊழியர் என்னிட[illegible]ருந்து பெற்றுக்கொண்ட சுதந்திரன் ஏடு, இப்போது சுங்க அதிகாரி ஒருவர் கையில் இருந்தது. அச்சுங்க அதிகாரிக்கு என்னைச் சுட்டிக்காட்டி குறித்த ஊழியர் ஏதோ கூறிக்கொண்டிருந்தார். சுங்க அதிகாரி என்னைப் பார்த்து ஒரு புன்னகையைத் தவழவிட்டார். நானும் பதிலுக்கு சிரித்துகொண்டேன். சுங்க பரிசோதனை முடிந்து வெளியே வருகிறோம் - அந்த ஊழியர் மீண்டும் என்னைத் தேடி வருகிருர்.

'நீங்கள்...நீங்கள்...' என்று ஏதோ கேட்கமுனைகிருர். அவர் என்ன கேட்க விரும்புகிருர் என்பதைப் புரிந்துகொண்டு, 'ஆமாம் நாங்கள் இலங்கையிலிருந்துதான் வருகிறோம்.' என்றேன்.

'நானும் இலங்கையிலிருந்துவிட்டு வந்தவன்தான் சார். அங்கு இப்போது நிலைமைகள் எப்படியிருக்கு சார்? என்ருன் அவன். அவனுக்கு இலங்கையின்நிலையைப்பற்றி ஒரு குட்டிப்பிரசங்கம்செய்துவிட்டு, வாடகைக் காரில் ஏறி நாம் தங்கவேண்டிய ஓட்டலுக்கு செல்கின்ருேம்.

வாடகைக் கார்ச் சாரதியுடன் பேச்சுக் கொடுக்கிறேன்:

'எப்படியப்பா இந்த ஊரில் தேர்தல் நிலவரம்'?

அவன் சொன்ன பதில் எனக்குத் திகீர் என்றது. தமிழ் நாட்டு மண்ணில் இறங்கியதும் இதையா நான் கேட்கவேண்டும்? தமிழ் நாட்டு அரசியல் பண்பாடு இப்படியா போகவேண்டும் என்று திகைக்கிறேன்.

'என்ன சார்? அப்பன், ஆத்தா பெயர் தெரியாதவன் எல்லாம் ஆட்சிக்கட்டிலில் இருக்கிருன் சார்... கோபாலபுரம் கோமாளி ஆட்சி இந்த முறை கவிழ்ந்துவிடும்'

இப்படியெல்லாம் தனது கருத்த பெரிய மீசையைத் தடவிக் கொண்டே அவன் கூறிக்கொண்டே போனுன். அவன் கூறியதையெல்லாம் எழுத என்பேனு கூசுகிறது. சீ., தமிழ் நாட்டில் சிண்டிகேட் காங்கிரஸ்காரனின் தரம் இப்படியா கீழிறங்கிப் போகவேண்டும்? எவ்வளவு தூரம் பண்பு கெட்டு பேசுகிருன் இந்த டிரைவர்...

அவன் கூறியதைக் கேட்க கேட்க எனக்கு ஆத்திரம் ஏற்பட்டாலும், நான் ஊருக்குப் புதியவன் என்பதனுல், சகித்துக்கொண்டு பேசாமல் இருந்தேன்,

டாக்ஸி போய்க்கொண்டிருக்கிறது. அதோ ஓர் ஊர்வலம் வருகிறது — தேர்தல் ஊர்வலம்தான் — வீதியை அடைத்துக் கொண்டு வருகிறது அந்த ஊர்வலம்!

அந்த ஊர்வலம் எங்களைக் காரைக் கடந்து செல்லும் வரை வீதியின் ஓரமாக காரை நிறுத்திவிட்டு பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

சிண்டிகேட் காங்கிரசு ஆதரவு ஊர்வலம் அது! அந்த ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட கோஷங்களை கேட்ட போது என் இரு செவிகளையும் பொத்திக் கொண்டேன்: சீ, எத்தனை கேவலம்? கண்டனத்துக்கும் ஒரு பண்பு, ஒழுங்கு வேண்டாமா? தமிழ் நாட்டின் பண்பாட்டை இப்படியா மாசுபடுத்த வேண்டும்?

வாடகைக் கார்க்காரனின் வசைமாரியும் அதையடுத்து வந்த சிண்டிகேட் ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட வெறிக் கோஷங்களும் எனக்கு பெரிய 'ஷாக்' ஆக இருந்தன. என்ன இது தமிழ் நாட்டு அரசியல் நிலையே தலைகீழாக மாறி விட்டதா? தி.மு.க. வின் செல்வாக்கு மங்கிவிட்டதாக கூறப்பட்டது உண்மை தானு?

இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது மற்ருேர் மாபெரும் ஊர்வலம் — மாணவர்கள் ஊர்வலம் வந்துகொண்டிருந்தது — கறுப்பு சிவப்பு கொடிகளுடன் அறிஞர் அண்ணாவின் திருவுருவம் தாங்கிய அட்டைகளை ஏந்தி வந்த அந்த ஊர்வலம் தி.மு.க, சார்பு ஊர்வலம் என்பதை புரிந்து கொண்டேன், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதற்கு எடுத்துக்காட்டாக அந்த தி.மு.க. ஊர்வலம் இருந்ததை கண்டபோது—தமிழ் நாட்டுப் பண்பாடு, அண்ணு வளர்த்த அரசியல் பண்பாடு — மறைந்து விடவில்லையென்பதை அறிந்து என் உள்ளம் ஆறுதல் அடைந்தது;

திருச்சியென்றதும் நமது நினைவுக்கு வருபவர்கள் இருவர், ஒருவர் முத்தமிழ்க் காவலர் பெரியவர் கி. ஆ. பெ. விசுவநாதம்; அடுத்தவர் மலைக் கோட்டைப் பிள்ளையார், மலைக்கோட்டைப் பிள்ளையாரை திருச்சியிலிருந்து புறப்படு முன்னர் கடைசியாக சந்திப்போம்; (முதலிலேயே பிள்ளையாரை சந்திக்காதற்கு பிள்ளையார் எங்களை மன்னிப்பாராக) அதற்கு முன் முதுபெரும் அறிஞர் விசுவநாதம் அவர்களைச் சந்திப்போம்;

**வளரும்**

---

## எழுந்திடடா இதயம்நொந்த இளந் தமிழா

—மு. தனிகாசலம்—

ஈழத்தில் தமிழர்குலம் என்றென்றில்லை
இருப்பதுவோ கலப்புச்சாதி என்றொருவன்
ஆழத்தில் நம்மைவைத்து அளந்தான்அன்று!
அந்தவடு நெஞ்சைவிட்டு அகலவில்லை.

கலைஉனக்கு இல்லை ஈழத்தமிழா நீயும்
கற்றதுவோ பிறநாட்டுச் சொத்துஎன்று!
நிலைமறந்து கேலிசெய்தான் வச்சிரசேனன்
தேற்றுவரை அதற்கெதிர்ப்புக் கொடுத்தாரில்லை

தமிழனுக்கு தனிமாநிலம் இங்கில்லை என்று
சங்கரனுர் குரல்கொடுத்தார் கேட்டிலேயோ!
தமிழ்நாட்டுச் சஞ்சிகைக்கும் வேலிபோட்டு
தரப்படுத்தல் விசத்தைக்கொட்டி வேலைபோச்சு

மொழியுரிமை குடியுரிமை தமிழர்க்கில்லை
முற்றிலுமே பௌத்தர்க்கென்ற முடிவாயிற்று
மலைநாட்டுத் தமிழர்பலம் மடக்கியாச்சு
மற்றுமென்ன மிச்சமுண்டு எம்மவர்க்கு

இந்தவிதம் கொடுமைசெய்யும் இனத்தவர்க்கும்
எச்சில்இலை நக்கிநிற்கும் எட்டப்பர்க்கும்
வந்துசேர்ந்தால் வடக்கில் பலவரவேற்புண்டு
வரிந்திழுத்து விருந்துகளும் கொடுப்பாருண்டு

நாடிருக்கும் நிலையுணராத் தம்பிரான்கள்
தலைமையிலே குலத்திலக்கா மந்திரிக்கு
பேடிகள்போல் பல்லிளித்து உடல்நெளித்தால்
பெருமைமிகு சைவத்திற்கு இழுக்காகாதா?

[illegible]களில் இவற்றைறச்சாற்றி என்னபயன்
எழுந்திட[illegible]
சாடிடடா [illegible]
சந்ததிகள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## வீரமாமுனிவர் தமிழ் மன்றம்

''இலங்கை யாழ் நகரில் நடைபெறவிருக்கும் நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் போது ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியோர்களுக்கு சிலை நிறுவ வேண்டுமென பத்திரிகைகள் மூலம் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. தமிழும் தமிழரும் உயர உழைத்தஉத்தமர்களுக்குசாதி, மத, பிரதேச வேறுபாடு காட்டாமல் சிலை எடுக்கப்படல் வேண்டும்.''

இவ்வாறு 4-2-72ல் நடைபெற்ற வீரமாமுனிவர் தமிழ் மன்ற ஆரம்பக் கூட்டத்தில் மன்றச் செயலாளர் டாக்டர் எஸ். லோறன்ஸ் அவர்கள் கூறினர்.

திரு. எஸ். யாக்கோப், திரு. [illegible] ஆகி[illegible]யோரும் பேசினர். மன்றத்தின் அலுவலர் செயற்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. எஸ். யாகோப், துணைத்தலைவர் திரு. த. தங்கவேலாயுத பிள்ளை, செயலாளர் டாக்டர் திரு. எஸ். லோறன்ஸ், துணைச் செயலாளர் திரு. சு. அந்தோனிப்பிள்ளை, பொருளாளர் திரு. வேலும்மயிலும், விளம்பரச் செயலாளர்கள் திரு. ஞா. மரியதாசன், திரு. எஸ். மைக்கல்,

செயற்குழு உறுப்பினர்கள் திரு. பெ. ஜேமியல், திரு. லோ. பெர்னன்டோ, திரு. செ. ஜொஸ்தின், திரு. மனுவேற்பிள்ளை, திரு. யோசு தோமஸ்.

# தமிழரசுக்கட்சியின் தலைமையில் விடுதலைபாதையில் முன்னேறிட மலையகத் தமிழனே! நீ தயாரா?

இலங்கை குடியரசு நாடாகிடும் நாள் நெருங்கியவண்ணம் வருகின்றது! இந்த காலகட்டத்தில் தமிழ்ப் பேசும் மக்களாகிய நாம் நமது சுதந்திரத்தையும் உரிமைதனையும் பேணிப் பாது காத்துக்கொண்டிட வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுவிட்டது! இந்நாடு குடியரசாவதினை லட்சோபலட்சம் வேற்றினத்து மக்கள் ஆதரித்து மகிழ்ந்துகொண்டாடிட அடித்திடும் இவ்வேளையிலே நாம் எமது தமிழ்ப் பிரதேசங்களில் அந்நாளினை துக்கதினமாக அனுஷ்டிக்கவுள்ளோம்!

"ஒன்றின் அழிவினிலிருந்து தான் ஒன்று ஆக்கம்பெறுகின்றது." என்ற வார்த்தைகள் எம்மினத் தவர்களைப் பொறுத்தவரையில் சரியாகவே அமைந்துவிடும்போல் தோன்றுகின்றது! இந்தக் காலம் இலங்கைவாழ் தமிழ்

பலாங்கொடை

## இரா. மோசஸ்

மக்களின் சரித்திரத்தில் இடம்பெறக்கூடிய அளவிற்கு பெரும் சோதனைக்காலமாகவும், வேதனைக்காலமாகவும் அமைகின்றது! எம்மினத்தவர்கள் தங்களது பெரும் சாதனைகள் புரிந்திட இதுவே தக்கதருணமாகும்! அவர்களுக்கு போதனைகள் தேவையில்லை; எனினும் சில யோசனைகள் இதோ!

இந்த நாட்டில் பிறந்து; இந்த நாட்டு மண்ணில் தவழ்ந்து இந்த நாட்டில் வளர்ந்து இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கேழுதுகெலும்பாகத்திகழ்ந்திடும் தமிழ் பெரும் மக்களுக்கு உரிமை மறுக்கப்படுகின்றது! அவர்களது சுதந்திரம் பறிக்கப்படுகின்றது! அவர்களின் பிரச்சினைகள் ஒதுக்கப்படுகின்றது! இந்த நிலையிலா குடியரசு?

எம்மக்கள் உரிமைவேண்டும் உரிமைவேண்டும் என்று எண்ணற்ற நாட்களாக— வருடங்களாக உரிமைக்காக உரிமைக்குரல் எழுப்பியும் இதுகாலவரையும் உரிமைகள் மறுக்கப்பட்டு உரிமையளிக்கப்படாத - சுதந்திரமளிக்கப்படாத இந்த நிலையிலா குடியரசு?

விடைகாணமுடியாத இவ்வண்ணமான பலகேள்விகள் எம்மிதய வானினிலே பெரும் இடியென மின்னி முட்டி மோதுகின்றது. ஆம் இந்த கேள்விகளனைத்திலும் உண்மையும் நியாயமும் இருக்கத்தான் செய்கின்றது. இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியில்; இப்படிப்பட்ட சூழ்நிலையினில் எமது நாடு இன்று இருந்திடும் வேளைதனில் இவையெல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்து சிந்தித்துப் பார்க்கும் எந்த ஒரு பிரஜையும் இந்நாடு குடியரசாவதினை ஆதரிக்கமாட்டான்!

எனவே இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் இன்று தங்களுக்கேற்பட்டுள்ள பெரும் அவலநிலையினை உணர்ந்து இனியும் இந்தநிலை நீடிக்குமெனில் இந்நாட்டுத் தமிழினத்திற்கு இனிமேல் என்றுமே விடிவோ விமோசனமோ - உரிமையோ - சுதந்திரமோ கிடைத்திடுவது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போன்ற நிலைதான் உருவாகிடும்! அதனால்; இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களனைவரும் இன்றே - இப்பொழுதே - ஒன்று கூடி தாங்கள் பல்லாண்டுகளாக காத்திருந்த காலம் வந்துவிட்டது; கடமையழைத்துவிட்டது; உரிமை - உடமை - சுதந்திரம் போன்ற அனைத்துமே பாதிக்கப்பட்டிடும் நிலையினையடைந்துவிட்டோம்!

எனவே நமது இன்றைய நிலையினை நன்குணர்ந்து நமது இனத்தின் எதிர்கால ஏற்றத்தினையும் சுபிட்சத்தினையும் விரும்பி அவர்களது தன்மானமிக்க வாழ்விற்காகவும், தலைநிமிர்ந்த வாழ்விற்காகவும், அடிப்படை உரிமைகளைப்பெற்ற வாழ்விற்காகவும், சுதந்திரம் நிறைந்த வாழ்விற்காகவும், அடிமையற்ற வாழ்விற்காகவும், அமைதி நிறைந்த வாழ்விற்காகவும், நாடற்றவன்— அயல்நாட்டான் - கள்ளத்தோணி என்ற இழிமொழியின்றி நிம்மதி நிறைந்த வாழ்விற்காகவும் ஈழத்தமிழர்களனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் ஓரணியினில் திரண்டிட வேண்டும்!

இல்லையேல்! இன்று நாம் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம்! சுதந்திரமிழந்தவர்களாக இருக்கின்றோம்! நாடற்றவர்களாக இருக்கின்றோம்! அடிமைகளாக இருக்கின்றோம்! ஒதுக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம்! மதிக்கப்படாதவர்களாக இருக்கின்றோம்! எள்ளி நகையாடப்படுபவர்களாக இருக்கின்றோம்! ஏளனம் செய்யப்படுபவர்களாக இருக்கின்றோம்! இந்நிலை நீடித்தால் இனி நாம் இங்கு தன்மானமிக்க மனிதர்களாக வாழமாட்டோம்! மனிதாபிமானமற்ற முறையினில் நடத்தப்படுவோம்! மாக்களாகக் கருதப்படுவோம்! அடக்கியொடுக்கப்படும் நிலைக்கு ஆளாவோம்!

வீரத்தமிழ்த்தாய் சுமந்து பெற்றெடுத்த மறத்தமிழ் மகனே! இந்நிலையேற்படுமானால்...! உன் நெஞ்சம் பதறித் துடிக்கவில்லையா? உன் இளம் இரத்தம் கொதிக்கவில்லையா? உன் உடல் பதறி நடுங்கவில்லையா? உன் எலும்பெல்லாம் உருகி குறுகவில்லையா? உன் உடலெல்லாம் பற்றி எரியவில்லையா? உன் உயிரையே பணயம் வைத்து உனது இனத்தின் விடுதலைக்காக போராடிட உன் மனம் துணியவில்லையா? தியாக மனப்பான்மை உன்னகத்தே உருவாகவில்லையா? உன் உடல் முறுக்கேறவில்லையா? ஒரு மத யானையின் பலம் உனது உடலில் ஏற்படவில்லையா? ஆமாம்; ஏற்படுகின்றது! நீ துணிந்துவிட்டாய் என்பதை நாம் அறிகின்றோம்! நல்லது. பதறாதே! நன்றாக சிந்தனை செய்! நீ செய்திடப்போகின்றவை யெல்லாம் நன்மை பயக்குமா என்றும் சிந்தி!

ஆனால் அதற்கு இடையினில் உன்னைப்போன்ற துடிப்பும், உணர்வும், உத்வேக

(11ம் பக்கம் பார்க்க)

## மலையகத்திலே.........

# வடக்கு கிழக்குடன் மலையகம் இணைந்து செயல்பட வேண்டும்!

## அமரர் இராஜலிங்கத்தின் குறிக்கோள் இதுவே!

மலையக மக்களின் நலனுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டு வாழ்ந்த தலைவர் 'மலைநாட்டு காந்தி' திரு. கே. ராஜலிங்கம் எம்மை விட்டு மறைந்து (11-2-72) ஒன்பது வருடங்கள் பூர்த்தியாகிறது. இந்நேரத்தில் அவரின் தன்னலமற்ற பொதுப்பணியை நினைவு கூருவது அவசியமாகும்.

தோட்டத்தில் பிறந்து, வளர்ந்த இவர் ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்து பின் தனது சொந்த முயற்சியால் புசல்லாவையில் சரஸ்வதி வித்தியாலயத்தை ஆரம்பித்து அதன் முதல் அதிபரானார். இன்று இவ்வித்தியாலயம் மகாவித்தியாலயமாகவும் அவரின் ஞாபக சின்னமாகவும் திகழ்கிறது. அதிபராக கடமையாற்றும் போது தோட்டப் பகுதி மக்களின் இன்னல்களை கண்டு மனம் வருந்தி தேசிய பணியில் குதித்தார். 1939ம் ஆண்டு அமரர் ஸ்ரீ நேருவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரஸில் முதல் கூட்டு காரியதரிசியாகவும் பின் பலமுறை தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார். 1947ம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலில் நாவலப்பிட்டி நாடாளுமன்ற அங்கத்தவராகவும் தெரிவு செய்யப்பட்டதோடு, ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன மகாநாடுகளில் இலங்கையின் பிரதிநிதியாக சென்று தோட்ட தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய அறிக்கைகளும் சமர்பித்து சர்வதேச அரங்கில் இலங்கைக்கு புகழீட்டி தந்துள்ளார்.

பதவி வகித்த காலத்திலும் சரி, பதவியற்ற காலத்திலும் சரி அவர் ஒரே வகையாகத்தான் உழைத்தார். காங்கிரஸில் ஏற்பட்ட பிளவுக்குபின் இ.தொ.கா. வில் திரு. தொண்டமானுக்கு துணையாக இருந்து காங்கிரஸின் வளர்ச்சியிலும், மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதிலும் அதிக அக்கறையுடன் இறுதி வரை உழைத்தார். இதே காங்கிரஸ் காரர்கள் இன்று இவரை மறந்து விட்டது பெரும் தலைக்குனிவாகும். தொண்டனை மதிக்காத இயக்கமும், கட்சியும் ஒருபோதும் உருப்படாது என்பதையும் நினைவூட்ட விரும்புகின்றேன்.

மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் மட்டுமன்றி, தமிழ் மக்களின் பிரச்சினைகளிலும், நாட்டின் பல பிரச்சினைகளிலும் தனது கருத்தை தெரிவித்து அவைகளுக்கு தீர்வு காண்பதில் பெரும் பங்குகொண்டு உழைத்தவர்களில் திரு. ராஜலிங்கத்திற்கு தனி இடமுண்டு.

பிரஜா உரிமை சட்டம் கொண்டு வரப்பட்டபோது ஜி.ஜி. பொன்னம்பலத்தின் துரோக செயலால் இலங்கை தமிழருக்கும், இந்திய வம்சாவழியினருக்கும் இடையில் ஒருவகை மனஸ்தாபம் ஏற்பட்டது. அப்போது வெறுப்பு வளரா வண்ணம் ஒற்றுமை பாலத்தினை கட்டிக்காத்தவர்களில் தலைவர் ராஜலிங்கம் முதன்மையானவராக திகழ்ந்ததை நாம் மறந்து விட முடியாது.

### எஸ். தியாகசேதுபதி
(நாவலப்பிட்டி)

தலைவர் ராஜலிங்கம் தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு, மலையகம், என்று பிளவுபட்டு கிடப்பதை விரும்பியது கிடையாது. வடக்கு, கிழக்கு மக்களின் பெரிய கட்சியான தமிழரசு கட்சியுடன் மலையகத்தின் பெரிய தொழிற் சங்கமான தனது இ. தொ. கா. ஒன்றுபட்டு செயல்பட வேண்டும், போராட்டங்கள் நடத்த வேண்டும் என்பதே தனது விருப்பமாகும். அதனை செயலிலும் காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவர் ராஜலிங்கத்தின் கொள்கைக்கு மாறுபட்டவரான கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள 'ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். நடேசன் ஒரு கட்டுரையில் ராஜாவைப்பற்றி குறிப்பிடுகையில் திரு. ராஜலிங்கத்திற்கு மலையக மக்களின் மொழியும், கலாச்சாரமும் அழிந்து விடுமோ என்ற பயம் சமீபகாலத்தில் ஏற்படவே திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தமிழரசு கட்சியின் உதவியை நாடினார். 1961ம் ஆண்டு முற்பகுதியில் தமிழரசு கட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் நடத்தியது. இதனால் நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்நேரத்தில் மலைநாட்டு மக்களையும் வேலைநிறுத்தம் செய்து அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்ள திரு. ராஜலிங்கம் தூண்டினார். இவரின் வேண்டுகோளுக்கு இணங்க இலட்சக்கணக்கான தொழிலாளர் இப்போராட்டத்தில் குதித்தனர். ஆனால் நாட்டில் ஏற்பட்ட பயங்கர, குழப்பமான சூழ்நிலையால் போராட்டத்தை தொடர முடியாமல் வாபஸ் பெறவேண்டிய நிலை அவரது ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டது" என குறிப்பிட்டுள்ளார்.' ஆம்! இதிலிருந்து தமிழ் மக்களின் ஒற்றுமைக்காகவும், மலையக மக்களை வட, கிழக்கு மக்களுடன் இணைப்பதிலும் அவரின் தொண்டு வெளிச்சமாகிறது இல்லையா?

மலையக மக்களுக்கு மட்டுமின்றி தமிழ் பேசும் மக்களுக்கே அளப்பரிய சேவை செய்த தலைவர் ராஜலிங்கம் ஒரு காந்தியவாதி, கதராடை அணிந்து எளிமையான முறையில் பிரமச்சாரியாக வாழ்ந்தார். 'மலைநாட்டு காந்தி' என அழைக்கப்படும் இவருக்கு, இறந்து ஒன்பது ஆண்டுகள் ஆகியும் மலையக மக்கள் ஞாபக சின்னம் ஒன்று அமைக்கத்தவறியது பெரும் கவலைக்குரியதாகும். ராஜலிங்கம் ஞாபகார்த்த குழு' ஒன்று அமைக்கப்பட்டு நினைவு சின்னம் எழுப்பும் வேலையில் தற்சமயம் சிலர் ஈடுபட்டிருப்பதாக தெரிகிறது. இவர்களின் முயற்சிக்கு சகலரும் ஆதரவு கொடுத்து தலைவர் ராஜலிங்கத்திற்கு நன்றி மறவாமல் ஞாபக சின்னம் எழுப்புவது அவசியமாகும்.

தோட்ட பகுதி மக்கள் அரசியல், குடி உரிமைகளைப் பெற்று இந்நாட்டு மனிதர்களோடு சமநிகராக வாழ வேண்டும். அத்துறையில் வெற்றிகாண அம்மக்களின் சக்திகள் ஒருமுகப்படுத்தப்படவேண்டும் என்பதே மறைந்த தலைவரின் வாழ்க்கைக்குறிக்கோளாகும். அவர் வழி சென்று மலையகத்தினதும், தமிழ்பேசும் மக்களினதும் சுபீட்ச வாழ்வுக்கு உழைத்து வெற்றி காண்போம்!

# சூரியகாந்தி தோட்டத்தில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

இராகலையைச் சேர்ந்த சூரியகாந்தி தோட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட தோட்டப் பாடசாலை ஆசிரியருக்கான பதவிக்கு மலையகத்திலிருந்து நூற்றுக்கணக்கான படித்த வாலிபர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர். ஆனால் விண்ணப்பித்தவர்களுக்கு மேற்படி தோட்ட நிர்வாகம் நேர்முகப் பரீட்சை நடத்தாமல் ஒருவரை வேலைக்கமர்த்தியதால், அதிருப்தியடைந்த இளைஞர்களும், சூரியகாந்தி தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 600 தொழிலாளர்களும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கீழ் இயங்கும் இலங்கைத் (இராகலை) தொழிலாளர் கழகப் பிரதிநிதி திரு. வி. ஆறுமுகநாதன் அவர்களிடம் செய்த புகாரை, தொடர்ந்து கழகம் சம்பந்தப்பட்ட நிர்வாகத்திடம் மேற்கண்ட புகாரை விளக்கி நடவடிக்கைக்காக அறிவித்திருக்கின்றது.

இதனை ஆட்சேபித்து சூரியகாந்திதோட்டத்தில் பள்ளிப் பிள்ளைகள் நாள்தோறும் பகிஷ்கரிப்பு செய்து வருகின்றனர்; தோட்ட நிர்வாகத்தின் இந்த வன் செயலால் மேற்படி பிள்ளைகள் கடந்த ஒருமாதகாலமாக பகிஷ்கரிப்பு செய்வதாக அறிய வருகின்றது. இந்த ஆசிரியர் நியமனத்தில் ஏற்பட்ட பாரபட்சத்தினை வன்மையாக கண்டிக்கும் முகமாகவும், மேற்படி கழகத்தின் கடிதத்திற்கு தகுந்த பதிலை தோட்ட நிர்வாகத்திடம் கேட்டும், இ. தொ. கழகம் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த விடயத்தில் சுமுகமான தீர்வுகாணவேண்டி, இதனை தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பா. உ. கழகத் தலைவர் திரு. அ. தங்கத்துரை பா. உ., துணைத் தலைவர் திரு. வி. என். நவரட்ணம் பா. உ. ஆகியோரின் உயர் கவனத்துக்கும், உரிய நடவடிக்கைக்கும் திருப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சியின் கீழ் கொண்டுவர கழகப் பிரதிநிதியும், சூரியகாந்தித் தோட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினர்கள் 350 பேரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் மக்களை நாங்கள் வழி நடத்தவில்லை; தமிழ் மக்களே எங்களை வழி நடத்துகிறார்கள்!

## நாவலருக்கு தரப்படும் பாராட்டு தமிழுக்கு தரப்படும் பெருமை"

## முதல்வர் கலைஞர் கருணாநிதி புகழுரை!



தமிழ்நாடு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் இலக்கியப் பணியையும் தமிழ் தொண்டையும் பாராட்டி மதுரைப் பல்கலைக்கழகம் அன்னாருக்கு டாக்டர் (டி. லிட்.) பட்டம் அளித்தது கௌரவித்தது. அதைப்பாராட்டி முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை இது:

டாக்டர் பட்டம் பெற்ற நாவலர் அவர்களுக்கு உங்கள் அனைவரின் சார்பில் வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமைப்படுகிறேன்.

நாவலர் அவர்கள் கூறினார்கள் நான் பிறப்பால் சோழ நாட்டைச் சார்ந்தவன். பெயரால் பாண்டி மண்டலத்தைச் சார்ந்தவன். பெண் எடுத்த வகையிலோ சேரன் தரவினையச் சார்ந்தவன். வாழ்கின்ற இடத்தால் பல்லவ பூமியைச் சார்ந்தவன் என்றும் தன்னைப் பற்றி நாவலர் கூறினார்:

நான் இப்படித் தனித் தனியாகச் சொல்லி எந்த இடத்துக்கும் சொந்தம் கொண்டாட, முடியாவிட்டாலும் இவ்வளவு இடத்துக்கும் சொந்தக்காரரான நாவலர் என்னுடைய நண்பர் என்ற காரணத்தால் இவ்வளவுக்கும் நானும் சொந்தக்காரனே என்று பெருமை அடைந்து கொள்கிறேன்.



கனியைப் பெறுவதற்கு உலகைச் சுற்றி வா—என்று ஆண்டவன் கட்டளையிட்ட போது, முருகன் மயில் வாகனத்தில் ஏறி ஊரெல்லாம் சுற்றினான். ஆனால் பிள்ளையாரோ தாய் தந்தையரைச் சுற்றி இதுதான் எனது உலகம் என்றான்:

அதைப் போல நாவலர் ஊரையெல்லாம் சுற்றி அத்தனை இடத்துக்கும் தான் சொந்தக்காரர் என்றார்.

ஆனால் அவரையே சுற்றி அவர் எனக்குச் சொந்தம் எனக் கூறுகிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை நானும் நாவலரும் நடத்திச் செல்ற பாங்கினை எடுத்துச் சொன்னார்கள்.

அந்தரங்கமாக இருந்த உலகத்தில் தமிழ் சமுதாயத்துக்காகப் பணியாற்றுவதற்கு நானும், நாவலரும் இருட்டில் பயணம் நடத்தினோம் என்றால், அந்த இருட்டிலே—பாதை காட்டிய வெண்ணிலவாகத் [illegible]வர் பேரறிஞர் அண்ணா அ[illegible]கள் ஆவார்கள்.

வெண்ணிலவு வானத்தில் இருக்கின்ற நேரத்தில் சுற்றிலும் விண்மீன்கள் இருப்பது வாடிக்கைதான்—

இன்று இருண்ட வெளியிலே பயணம் நடந்துகின்ற எங்களுக்கு வெண்ணிலவு வானத்திலே இல்லாவிட்டாலும் விண்மீன்களாக தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நீங்களிருந்து வழிகாட்டுகிறீர்கள் என்கின்ற ஒரே ஒரு நம்பிக்கையிலே தான் நாங்கள் பயங்கரமான பாதையிலும் குண்டு குழிகள் நிறைந்த பாதையிலும் அறிஞர் அண்ணா அவர்களை இதயத்திலே பதிய வைத்தவாறு இந்தப் பெரிய காரியத்தை—இலட்சியத்தை நிறைவேற்றுவதாக பயணம் நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

இன்று காலையில் மதுரைப் பல்கலைக் கழகத்திலே நாவலர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்ட நேரத்தில்—உடனிருக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருந்தேன். அந்த இடத்திலேயே தொடர்ந்து நடைபெற்ற விழாவில்—நான் அவரைப் பாராட்டுகின்ற பெரும் பேற்றினையும் பெற்றிருந்தேன்.

தமிழகத்ினுடைய ஆளுநர் கே. கே. ஷா அவர்களுடைய தலைமையிலே நடைபெற்ற அந்த விழாவில்-நாவலரைப் பாராட்டுகின்ற அந்த அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருந்தது.

நான் அங்கேயே சொன்னேன்—நாவலர் அவர்களுக்குத் தரப்படுகின்ற பாராட்டு—வழங்கப்படுகின்ற விருது—வாரி இறைக்கப்படுகின்ற வாழ்த்துக்கள் எல்லாம் தமிழுக்கு—தமிழ் சமுதாயத்திற்கு—தமிழ் இலக்கியத்திற்கு—தமிழ் வரலாற்றிற்கு—தமிழ்ப் பெருங்குடி மக்கள் உணர்ச்சிக்கு தரப்படுகின்ற வாழ்த்தும் பாராட்டும் என்று நான் காலையிலேயே குறிப்பிட்டேன். அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி இன்றைக்கு வளர்ந்து கோபுரம் போல நிற்கின்றதென்ற பெருமையை நாவலர் அவர்கள் இங்கே விளக்கிக் காட்டினார்கள்.

### கோபுரமும் அடிக்கல்லும்!

கீழே அடித்தளமாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை கட்டிக்காக்கின்ற தொண்டர்கள்—[illegible] [illegible] கோபுரத்தைத் தாங்குகின்ற அளவினை தொண்டர்கள் [illegible]

கோபுரத்திலே சிறிய சிறிய பொம்மைகளாக வட்டச் செயலாளர்களும், பெரிய பெரிய பொம்மைகளாக மாவட்டச் செயலாளர்களும் கலசங்களாக நாங்களும் இருப்பதாக நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கலசத்திற்கு நடைபெறுகின்ற கும்பாபிஷேகத்தைப் பற்றியும் சொன்னார்கள்? கும்பாபிஷேகம் எப்போதாவது ஒரு முறைதான் நடைபெறும். மதுரைக்கோவிலில் எத்தனையோ ஆண்டு காலத்திற்குப் பிறகு பி. டி. ராசன் தலைமையிலே புதுப்பித்த பிறகு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இன்னும் பல ஆண்டு காலத்திற்குப் பிறகு தான் ஜீவரோத்தாரணம் நடைபெற்று—கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும்.

ஆனால் இந்த இடைக்காலத்திலே தினந்தோறும் கலசங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவதில்லை. நடைபெறுவதெல்லாம் காக்கை குருவிகளினுடைய எச்சங்களின் அபிஷேகம் தான். அதைப்போலத்தான் கோபுரத்தின் உச்சியிலே இருக்கின்ற எங்களுக்கும் அந்த அபிஷேகம் தான் தினந்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் நீங்கள் மறந்துவிட வேண்டாம்.

வட்டச்செயலாளர்களும், மாவட்டச் செயலாளர்களும் பொம்மைகளாக இருக்கலாம். நானும் நாவலரும் கலசங்களாக இருக்கலாம். ஆனால் கழகத் தொண்டர்களாகிய நீங்கள் அவர் வர்ணித்த அந்தக் கோபுரத்தில் மிகுந்த பாதுகாப்பான இடத்தில் இருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற மாற்றுக் கட்சியினர்—எதிர்க்கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகம் வாழ்வதா—வளர்வதா என்ற மன அரிப்புக் கொண்டவர்கள். எரிச்சல் மிகுந்தவர்கள் மொத்தக் கோபுரத்தையும் தாங்கிக் கொண்டிருக்கின்றார்கள்;

இந்தக் கோபுரம் இடிந்து விழாதா? தகர்ந்து போகாதா-தரைமட்டமாகாதா-தனலுக்கு இரையாகாதா—என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்; அதைத்தான் நம்முடைய மதுரை மாவட்டச் செயலாளர் முத்து அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்; அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்கள். அறுதியிட்டுச் சொன்னார்கள். உறுதியாகச் சொன்னார்கள்.

எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாஅவர்கள் மறைந்தபிறகு திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்துவிடும் என்று பல பேர், எண்ணியதுண்டு.

### நாவலரும்—நானும்!

ஆனால் நானும், நாவலரும் அவர்கள் எல்லாம் எதிர்பார்த்ததைப் போல வேறு வேறு திசைக்குப் போய் விடுவோம் என்று கருதியவர்களும் உண்டு. அவர்களுக்கு நாங்கள் தந்த பாடம்—நாங்கள் பிளப்பதுபோல்கொஞ்சநான் காட்டினோம்.

அதிலே வந்து ஆப்பசைத்தவர்கள் எந்த வகையிலே சிக்கிக் கொண்டார்கள் என்பதைக் கழகத்தினுடைய சரித்திரம் இந்த நாட்டிற்கு அறிவித்திருக்கிறது என்பதையும் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

நாவலர் அவர்களை-இன்று நேற்றல்ல—பல ஆண்டு காலமாக நான் அறிவேன். அவர்கள் என்னை அறிவார்கள்! அவர்கள் குறிப்பிட்டார்கள் இருவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், ஒரே வட்டத்தைச்சேர்ந்தவர்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

1944-ம் ஆண்டு 9-ம் மாதம் 13-ம் திகதி எனக்குத் திருமணம் நடைபெற்றது; அந்தத் திருமண விழாவிற்கு காலையிலே நாவலர் அவர்கள் வந்திருக்க வேண்டும் எதிர்பார்த்தேன். ஆனால் திருமணம் முடிந்த பிறகு தான் நாவலர் அவர்கள் வர நேரிட்டது.

(12-ம் பக்கம் [illegible])

## அண்ணா ஓர் அமைப்பு

—'தாமரைத் திவான்'—

வந்தார் நமதண்ணா! வளமார் 'தமிழ்நாடு'
தந்தார்! அதனைத் தமிழகத்தார் — சிந்தித்தே
வாழ்த்தினர் அண்ணா வளர்த்த கழகத்தை!
வீழ்த்தினர் பகையை! வெற்றி!

ஆரியப்பேய்செய்த அலங்கோலமசன பெருங்
காரியங்களெல்லாம் கடும்பணியால் — வேருடனே
வீழ்த்தினர் அண்ணா! வீரத்தமிழர்தலை
தாழ்த்தினர்! கண்டார்தமை!

அடித்தார் பழமைக்கு! அத்தோடு நாடகத்தில்
நடித்தார்! படிப்படியாய் நாட்டாட்சி — பிடித்தார்!
அண்ணாவின் ஆற்றல் அறியாதெதிர்த்தோர்கள்
மண்ணோடு ஆகினர் மண்!

அண்ணா தனிமனிதன் அல்ல, ஒரு அமைப்பு!
அண்ணா பலதுறையிற் பேரறிஞன்! — அண்ணாவை
எவ்வெத்துறையினர்கள் எம்முறையிற் காண்பாரோ?
அவ்வத்துறையில் அறிவார்!

அடுக்கிருக்கும்! அழகிருக்கும்! அண்ணா தமிழினிலே
மிடுக்கிருக்கும்! மாற்றார் மிகவிரும்பும்—தடுக்கிருக்கும்!
வெடுக்கென்றிழுத்ததுபோல் வேதனையாம் நூல்முடிவில்
எடுக்குமுன்போ இனிக்கும்!

தம்பிபடைகண்ட தலைவர் எனில் அண்ணாவே!
தம்பி அவர்பின் நடைபோட்டுத் — தம்பியெனச்
சுற்றினர் காளையர்கள்! தேய்த்தார் தமிழ்மதுவில்!
பற்றினர் ஆட்சிப்படை!

அண்ணா மறைந்தாலும் ஆட்சிநிலைத்துளது!
கண்ணான தம்பிக்கலைஞரையே — மண்ணாளும்
படியிங்குவிட்டுப் பணிகள் முடித்தண்ணா
அடிதூக்கினர் யாம் அழ!

அழுதென்ன? சோர்ந்தென்ன? ஆவதினி ஏதுமிலை!
தொழுது நமது பணிதொடர்வோம்! — பழுதி[illegible]
ஈழத்தில் அண்ணாபோல் இரண்டொருவர் மா[illegible]
வாழக்கிடைக்கும் வழி!

### சிலம்புச்செல்வர் நலம்பெறுக!



சிலம்புச்செல்வர் ம: பொ: சிவஞானம் அவர்கள் குடல் புண் காரணமாக வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெற்றுவருவதாக அறிகிறோம். தமிழுணர்ச்சியின் மொத்த வடிவமான ஐயா ம. பொ. சி. அவர்கள் பூரண நலமடைந்து விரைவில் வீடு திரும்ப வேண்டுமென பிரார்த்திக்கிறோம். சிலம்புச்செல்வரின் நலம், தமிழினத்தின் நலமன்றோ!

மபொ: சி: அவர்களைப் பாராட்டி இந்திய அரசு 'பத்மஸ்ரீ' பட்டம் வழங்கி அண்மையில் கௌரவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகிகளைப் பகிஷ்கரிப்போம்!

## மக்கள் குரல்

இன்று குழு நிலையில் விவாதிக்கப்படுகின்ற புதிய குடியரசின் அரசியலமைப்புச் சட்டம், தமிழினத்தின் உரிமைகளை மறுக்கும் திட்டமாகும். இதனை அன்று தொடக்கம் எதிர்த்துவரும் உண்மையான ஒரேயொரு தமிழர் விடுதலை இயக்கம் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பேரபிமானத்தைப் பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும்.

ஆனால் தமிழ்க் காங்கிரஸிலுள்ள பா. உக்களும், கிழக்கு மாகாணத்தில் பட்டிருப்பு, கல்குடாப் பா. உக்களும், மட்டுநகர் 2வது பா. உவும் இதுவரையில் புதிய அரசியல் திட்டத்தைப் பற்றி எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை; இவர்களை விட மலையகத் தொழிலாளரின் பாதுகாவலன் தானேயென்று பெருமை பேசும் ஜ. தொ. கா. அஸீசும் சிறுபான்மைத் தமிழரின் பிரதிநிதியெனக் கூறும் எம்; வி. சுப்பிரமணியமும் எதிர்ப்புக்குரல் கொடுக்கவில்லை. இ. தொ. கா. என்ன செய்கின்றதோ தெரியவில்லை;

கம்யூனிஸ்ட் கட்சியின் வட பகுதி வால்பிடிகள் சிங்களத்தை வடபகுதியில் பரப்புவதற்கு நாம் உதவி செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். வட பகுதிச் சமசமாஜிகளின் பேச்சையே காணவில்லை. தேர்தலுக்குத் தேர்தல் தமிழ்ப்பகுதிகளுக்கு வந்து தம்பட்டமடிக்கும் இவர்கள் புதிய அரசியல் திட்டம் பற்றி மௌனம் சாதிப்பது ஏன்? இவர்களைவிட தமிழ்ப் பகுதி சிறீ.ல.சு. கட்சி உறுப்பினர்கள் அக்கட்சியுடன் சங்கமமாகி விட்டார்கள் எனவே புதிய அரசியல் திட்டத்தைப் பற்றி எதிர்ப்புத் தெரிவிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

ஒரு தமிழ்த் தினசரியும் தமிழரின் ஒற்றுமையைக் குலைத்து புதிய அரசியல் திட்டத்துக்குத் தமிழரசுக் கட்சியினர் ஏன் தமிழ் மக்கள் எல்லோருமே காட்டும் எதிர்ப்பைக் குறைத்துவிட பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது. இலங்கையில் முஸ்லீம் சமூகத்தின் பிரதிநிதிகள் கூட இத் திட்டம் பற்றி எதையும் துணிந்து கூறவில்லை என்பது வேதனைக்குரியது.

இதுவரையும் கூறப்பட்டவர்கள் புதிய அரசியல் திட்டம் தமிழினத்துக்குத் தீமையானது என்பதை நன்றாக உணர்ந்தவர்கள். ஆனால் தமது பதவிகள் பறிபோய் விடலாம் என்ற பயத்தினால் அதனை ஆதரிப்பவர்கள் தமிழினத்தின் விடுதலையைப் பற்றி இவர்களுக்கு அக்கறையில்லை. தாம் வாழ்ந்தால் போதும் என்ற சுயநலப் பித்தர்கள்: ஆனால் இவ்வளவு துரோகிகளும் இன்று தமிழினத்தின் வாழ்விடங்களிலெல்லாம் தலையை நிமிர்த்திக் கொண்டு செல்கின்றார்கள்: ஒரு சில பச்சோந்தித் தமிழர்கள் இவர்களை வரவேற்கவும் இருக்கிறார்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் பெரு மக்களே நன்றாக சிந்தியுங்கள் இந்தத் துரோகிகளான ஒரு சிலரினால் பல்லாண்டு காலப் பெருமையுடைய எம்மினம் ஈழத் திருநாட்டில் அழிய வேண்டுமா?

[illegible]லும்புத் துண்டைப் [illegible]ட்டு இவர்களை விலைக்கு [illegible]ங்கி விட்ட அரசு புதிய அ[illegible]சியல் திட்டத்துக்கு முஸ்லிம் பெரும்பான்மை இனமான தமிழர்களின் ஆதரவும் இருக்கின்றது என்பதை வெளி உலகுக்குக் காட்ட, இவர்களை விலைக்கு வாங்கியிருக்கிறது: அரசு இத் தமிழ்த் துரோகிகளின் செயலை இலங்கை வாழ் தமிழ் பேசும் இனொருநர்

வங்காள விடுதலை பற்றி நிறையக் கேள்விப் பட்டிருக்கிறோம். எத்தனை வங்காள மக்கள் தம் அருமைத் தாய் நாட்டின் விடுதலைக்காகப் பெரிய பெரிய பதவிகளை எல்லாம் தூசாக மதித்து, பதவிகளைத் துறந்து தாய் நாட்டு விடுதலைக்காகப் போராடினார்கள்: கிழக்குப் பாகிஸ்தானுக்கு வந்த கவர்னருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க மறுத்தாரே ஒரு நீதிபதி என்னே அவரின் நாட்டுப் பற்று? அதுபோல கள் ஏற்றுக்கொள்ளப் போகிறீர்களா?

தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு இத் துரோகிகளின் கொட்டத்தை ஒடுக்கவேண்டும். இவர்களைப் பொது விழாக்களுக்கு அழைக்காதீர்கள். மாலை மரியாதைகளைக் கொடுக்காதீர்கள் இக் கயவர் கூட்டத்தை முற்றாகப் பகிஷ்கரியுங்கள் மண வீட்டுக்காயினும், மரண வீட்டுக்காயினும் இவர்களை அழைக்காதீர்கள். இவர்கள் செல்லாக்காசு ஆக்கப் பட வேண்டும்.

ஒவ்வொரு தமிழனும் தனது மொழிக்காகப் பதவிகளைத் துறந்தேனும் போராட முன் வரவேண்டும்.

பல அநீதிகளைக்கடந்த 23 ஆண்டுகளாகப் பதவிக்கு வந்த அரசுகள் செய்து விட்டன; இவற்றுக்கெல்லாம் மகுடம் சூட்டியது போன்றதே புதிய அரசியல் திட்டம். சோல்பரி அரசியல் திட்டத்தைப் பூரணமாக எதிர்த்து எமது எதிர்ப்பை ஒற்றுமையாகக் காட்டாதபடியால் பல இன்னல்களைத் தமிழர் இந்நாட்டில் அனுபவித்துள்ளனர். அந்த நிலையே இன்னும் தோன்றியுள்ளது. பல துரோகிகள் தமிழர்கள் என்ற பெயரில் உள்ள எட்டப்பர்கள் தமிழினத்தை மீளா அடிமையாக்க கங்கணம் கட்டி நிற்கிறார்கள்: இந்த நிலை உடனே மாறவேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் சாதி மத பிரதேச வேறுபாடுகளை மறந்து, தமிழன் என்ற பொதுக் கருத்தில், தமது எதிர்ப்பை எவ்வித சுருதி பேதமும் இல்லாமல் காட்ட வேண்டியது மிக அவசியம்: தமிழ் பேசும் மக்களே விழித்தெழுங்கள். உங்கள் எதிர்ப்பை அரசுக்கு எவ்வழிகளில் தெரிவிக்க முடியுமோ அவ்வழிகளில் தெரிவியுங்கள் வாழ்க தமிழ்! வளர்க இலங்கைத் தமிழ் பேசுமினத்தின் விடுதலை வேட்கை.

—தமிழ்ப்பித்தன்.

# 'உலகத் தமிழர்களின் தலைவராக விளங்கியவர் அறிஞர் அண்ணா'!

## சிதம்பராக்கல்லூரியில் அமிர் பேச்சு!

சிதம்பராக் கல்லூரி பக்கலைக் கழகப் புகுமுக மாணவர் மன்றம் சென்ற வியாழக்கிழமை (3-2-72) அறிஞர் அண்ணாவின் சிரார்த்த தினத்தை மன்றத் தலைவர் செல்வன் சி. நடராசாவின் தலைமையில் கல்லூரியின் முன் மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினர். தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் திருவாளர் அ. அமிர்தலிங்கம், திரு. சி. தர்மகுலசிங்கம், "காவைக்கிழான்" (கந்தசாமி) ஆசிரியர் சு. கதிர்காமத்தம்பி ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

திருவாளர் அ: அமிர்தலிங்கம் அவர்கள் 'அண்ணா ஏன் அரசியலில் புகுந்தார்' என்ற தலைப்பில் பேசினார்: அப்போது அவர் கூறியதாவது:

'அண்ணா அவர்கள் எம். ஏ: சித்தியடைந்ததும் பெரியாரின் நீதிக்கட்சியில் சேர்ந்து, பத்திரிகை ஆசிரியராகவிருந்து பெரியார் அவர்களுடன் சேர்ந்து பல சீர்திருத்தங்களைச் செய்தார். ஆனால் வெள்ளையன் வெளியேறிய ஆகஸ்ட் 15ம் திகதியை துக்கதினமாகக் கொண்டாட வேண்டுமென்ற பெரியாரின் அறிக்கைக்கு அண்ணா மறுப்புத் தெரிவித்தார். இதனாலும் பெரியாரோடு கொண்ட வேறு சில கருத்து வேறுபாடுகளாலும் அண்ணா நீதிக் கட்சியிலிருந்து வெளியேறி தமது தம்பிமாரிலோடு தி.மு.க.வை தொடங்கிப் பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

அண்ணா மேடைப் பேச்சு மூலமும், நாடகங்கள் மூலமும், சினிமா மூலமும் பிரசாரம் செய்து சமுதாயத்திலிருந்த மூடக் கொள்கைகளுக்குச் சாவு மணியடித்தார். அண்ணாவைப் பிற்போக்குவாதி சுதந்திரப் போரில் ஈடுபடாதவன், நாஸ்திகன், பிராமணத் துவேஷி என்றெல்லாம் எதிரணியினர் திட்டினார்கள். ஆனால் நாஸ்திகன் என்று கேலியாக அழைக்கப்பட்ட அண்ணாவின் ஆட்சியில் கோவில்கள் அழிக்கப்படவில்லை: அதற்கு மாறாக அண்ணாவின் ஆட்சியில்தான் கோவில்கள் நல்ல நிலைமையில் நடந்தன.

சாதியின் பெயரால் தமிழினம் சின்னாபின்னப்படுவதைக் கண்ட அண்ணா சாதி முறையை ஒழிக்க முயன்றார், இதற்காக கலப்புத் திருமணங்களை ஆதரித்தார், சீர்திருத்தக் கலியாணங்களை வரவேற்றார். ஏன்? கலப்பு மணம் செய்பவர்களுக்கு பரிசில்கள் கூட வழங்கினார். மூடக் கொள்கைகளை முற்றாக அழிக்கமுயன்ற அண்ணா கம்பராமாயணத்தை தீயிலிட்டு எரிக்கவேண்டுமென்று பிரச்சாரம் செய்தார்: ஆனால் அதே அண்ணா இரண்டாவது உலகத்தமிழராய்ச்சி மகாநாட்டின்போது கம்பனுக்கும் சிலை வைத்தார் ஏனெனில் கம்பனின் மூடக் கொள்கைகளை எதிர்த்தாரே தவிர கம்பனின் திறமையை நன்கு மதித்தார். அண்ணா மாற்றுக் கட்சியினரின் நல்ல கருத்துக்களையும் வரவேற்பவர். மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று அடிக்கடி கூறுவார், தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது காமராஜருக்குக் கூட உரிய இடத்தைக் கொடுத்தவர் அண்ணா,

வடநாட்டார் தென்னாட்டை அடக்கி ஆள்வதை விரும்பாத அண்ணா தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற வழியைத் தேடினார்: அதற்கு இரண்டு மார்க்கங்கள் இருந்தன.

ஒன்று;- இணைப்பாட்சி.
இரண்டு;- தனியாட்சி.

அண்ணா தனியாட்சி கோரியபோது காமராஜரின் தூண்டுதலால் மத்திய அரசு பிரிவினை, கோரும் இயக்கங்களைத் தடைசெய்யவேண்டுமென்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தது. காலத்துக்கேற்ப நடக்கும் அண்ணா பிரிவினை கேட்பதை தற்காலிகமாக நிறுத்திவிட்டு மாநில சுயாட்சியைக் கோரினார்;



1967ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அண்ணா வெற்றி பெற்று முதலமைச்சராக வந்ததும் முதன் முதல் மத்திய அரசைக் கொண்டு சென்னை என்ற பெயரைத் 'தமிழ் நாடு' என்று மாற்றினார். காங்கிரசார் காலங் காலமாக முயன்றும் செய்ய முடியாததை அண்ணா முதலமைச்சரானவுடன் செய்தாரென்றால் அண்ணனின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ? அண்ணா தமிழின எழுச்சியின் சின்னமாக விளங்கினார்.

அண்ணா உலகத் தமிழர்களின் தலைவராக விளங்கினார். தமிழ் மக்கள் எங்கு கஷ்டப்பட்டாலும் அவர்களுக்காகப் பாடுபடுவார்: 1958ம் ஆண்டு இலங்கைத் [illegible] உலக நாடுகளின் கவனத்தை இலங்கைத் தமிழர்களின் மேல் செலுத்த பல முயற்சிகளைக் கையாண்டார்.

அண்ணாவுக்கும் வங்க வீரர் சேக் முஜிபுர் ரகுமானுக்கும் அரசியலைப் பொறுத்தமட்டில் நெருங்கிய ஒற்றுமையுண்டு; முஜிப்பும் வங்கப் போர் ஆரம்பமாகும் வரை பிரிவினையைக் கேட்கவில்லை. பிரிவினைக்கு வழிவகுத்தவர் யஹியாக்கான்தான் என்பதை உலகறியும். மேடையில் எனக்குமுன் பேசிய நண்பர் ஒருவர் இங்கு தமிழர்கள் தனியாட்சி அமைக்கமுடியாதென்ற கருத்துப்படப் பேசினார். நான் அரசியல் பேச விரும்பவில்லை. எனினும் அந்த நண்பர் என்னைப்பேச வைத்துள்ளார். போர்த்துக்கேயர் ஆட்சிக்கு முன்பு அதாவது 1618ம் ஆண்டுக்கு முன்புவரை யாழ்ப்பாணத்தில் தனியாட்சி நிலவியதென்பதும் யாழ்ப்பாணத்தின் தலைநகரம் நல்லூர் என்பதும் வரலாறு கூறும் உண்மை? ஆனால் போர்த்துக்கீசர் நிர்வாக வசதிக்காக மாகாண ஆட்சியை ஏற்படுத்தினார்கள் என்பதை நண்பன் அறியவில்லைப் போலும்;

நான் ஒருசிலரைப் போல் அண்ணா ஆட்சிக்கு வந்தபின் அண்ணாவைப் பற்றிப் புகழ்பவன், பேசுபவன் அல்ல: நான் படிக்கும் காலத்திலிருந்தே அண்ணாவின் நூல்களையும், பத்திரிகைகளையும் படித்து வந்திருக்கிறேன்: இப்போது அந்நூல்களுக்கும் தடை! இதற்குப்பெயர்தான் முற்போக்கு.

நான் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது அண்ணாவை ஒருமுறை இலங்கைக்கு வருமாறு அழைத்தபோது தமக்கு கட்சி வேலைகள் அதிகமாக இருப்பதால் பிறகுவருவதாக கடிதம் எழுதியிருந்தார்: ஆனால் அவர் என்றுமே வராமல் மறைந்துவிட்டார்.

—இவ்வாறு அமிர்தலிங்கம் பேசினார்.

## காரைநகர் தமிழரசுக் கிளை

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் காரைநகர் கிளையின் வருடாந்தக் கூட்டம் 16-1-72 ஞாயிற்றுக் கிழமை மாலை 7.00 மணிக்கு காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் திரு. செ. வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கதிரவேற்பிள்ளை, உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் நியாயவாதி, தமிழ் அரசுக் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

காரைநகர் தமிழ் அரசுக் கட்சி கிளையின் புதிய உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது.

தலைவர்: செ. வேலுப்பிள்ளை; உப தலைவர்கள்: மு. பாலசிங்கம் எஸ். கந்தையா எஸ். சபாபதி. செயலாளர்: க. அமிர்தலிங்கம். பொருளாளர்: ஆ: இரத்தினசிங்கம்.

15 பேர் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. கூட்ட ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் காங்கேசன்துறையில் வங்காள தேசத்தின் வெற்றிவிழாவில் பேசிய பேச்சின் ஒலிப்பதிவு பல தமிழரசுக்கட்சி அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒலிப்பரப்புச் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக் கட்சி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மும், தன்மானமும் கொண்டிட்ட ஆயிரமாயிரம் தமிழ் மகன்மார் நம்மத்தியிலே பல்கிப்பெருகிட வேண்டும்! அவர்களும் தங்களது இனத்தாரின் நிலையினையறிந்து அதனை நிவர்த்தியாக்கிடும் நற்பணியினிலே இறங்கிட வேண்டும்! அதற்கு முதல் வழி ஒற்றுமை! ஆம் இன்று இந்த நாட்டின் சந்துபொந்துகளிலெல்லாம் நம்மினத்தவர்கள் சாதியால் பிரிக்கப்பட்டு; தொழிலாளி பிரிக்கப்பட்டு; பொருளால் (செல்வத்தால்) பிரிக்கப்பட்டு; கல்வியால் பிரிக்கப்பட்டு நான் நீ என்ற நிலையில் மிக மிக வேறுபட்டு; மாறுபட்டு; தாங்களனைவரும் இனத்தால்-பேசும் மொழியால் ஒன்றுபட்டவர்களென்பதைக்கூட மறந்து ஒற்றுமையில்லாதவர்களாய் வாழ்ந்து வருகின்றார்கள்! எனவே;

அவர்களனைவரும் தங்களது இனத்தின் விடுதலையினை மிகவும் மேலாகக் கருதி—தங்களது உயிரினும் மேலாக மதித்து; தங்களது தொழிலை மறந்து; சாதியை மறந்து; மதத்தை மறந்து தாங்களனைவரும் இனத்தால்-பேசும் மொழியால் ஒன்றுபட்டவர்களென்றுணர்ந்து தமிழன்னையின் கண்ணீரினை துடைத்திடவும், அவளது மானம் காத்திடவும், தங்களவர்களின் எதிர்கால சந்ததியினரின் நலனைக்கருதியும் எல்லோரும் ஒன்றுபட்டு ஓரணியினில் திரண்டு நாட்டின் பலபாகங்களிலிருந்தும் (சந்துபொந்துகளிலிருந்தும்) வெளிப்பட்டு உரிமைக்குரல் எழுப்பிடவேண்டும்! அதற்கான சந்தர்ப்பம் வந்துவிட்டது! இனி வாளாவிருப்பதில் பயனில்லை! அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்! எனவே;

எம்மை வழி நடத்திட தமிழரசுக்கட்சி தயாரான நிலையில் காத்திருக்கின்றது; எமது நோக்கம் வெற்றி வாகையினை சூடும் வழிதனை தமிழரசுக்கட்சி நன்கு தெரிந்து வைத்திருக்கின்றது. எனவே அக்கட்சி உதவிக்காக அறைகூவி அழைக்கும் வேளையினிலே உடன் சென்று தோள் கொடுத்திட நாம் நம்மை தயார்படுத்திக்கொண்டு அதுவரையும் அமைதியுடன் காத்திருப்போம் வெற்றி நமதே!

## இனப்பிரச்சினை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வது அரசியல் அமைப்புச் சட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கோரினோம்; 'ஊசி குத்த இடங்கொடேன்' என்று துரியோதனன் அளித்த பதிலே எமக்குக் கிடைத்தது.

இந்தச் சூழ்நிலையில் அரசியல் நிர்ணய சபையில் நாம் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதால் தமிழினத்திற்கு எவ்வித நன்மையும் விளையமாட்டாது என்பது உறுதியாகியது. 28-6-71 அன்று மொழியுரிமை பற்றி நாம் கொண்டு வந்த திருத்தங்கள் தோல்வியடைந்ததின் பின் தந்தை செல்வநாயகம் அவர்கள், எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணயசபை நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்குபற்ற மாட்டார்கள் என அறிவித்தார்.

அதன் பின் அரசியல் நிர்ணயசபை தமிழினத்தின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளினால் பகிஷ்கரிக்கப்பட்டு தமிழினத்தின் சார்பில் அரசியல் சட்டத்தை ஆக்குவதற்கு எவ்வித உரிமையும் அற்றதாகிவிட்டது என்பதை நான் தெளிவாகக் கூற விரும்புகின்றேன்.

(அடுத்த இதழில் முடியும்)

## தமிழ் மக்களை நாங்கள்..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே இருந்த தன்னை அழைக்க இந்தக் கருணாநிதி எனக்கு 2 ரூபாய்தான் வழிச் செலவுக்கு அனுப்பினார் என்று கேலி செய்தாரே! அந்த நாவலர் அவர்கள் என்னுடைய திருமணத்திற்கு வர ஒரு பஸ்ஸிலே ஏறி நாலணா கொடுத்து வரலாம். கஞ்சத்தனத்தின் காரணமாக அவரும் அவரது இளவல் செழியனும் ஏழு மைல் தூரம் நடந்தே வந்த காரணத்தினால் என்னுடைய திருமண விழாவிலே குறித்த நேரத்திலே வந்து கலந்து கொள்ள முடியாமல் பிறகு மாலையிலே 4 மணிக்கு ஏற்பாடு செய்திருந்த திருமண பாராட்டு விழாவிற்கு வந்து சேர்ந்தார்; அதிலே நாவலர் அவர்களை மணமக்களை வாழ்த்துமாறு கேட்டுக் கொண்டார்கள்: அவ்வாறே மணமக்களை அவர்கள் வாழ்த்திப் பாராட்டி அரியதோர் உரை நிகழ்த்தினார்கள்.

அந்த அளவிற்கு 1944-ம் ஆண்டல்ல; அதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே நாவலர் அவர்களும் நானும் நெருங்கிப் பழகி திராவிடர் இயக்கக் கருத்துக்களை — சுயமரியாதைக் கொள்கைகளை — அறிவிக்க எண்ணங்களை நாட்டிலே பரப்புகின்ற பணியிலே பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலும் — அதற்கு முன் தந்தை பெரியார் அவர்களுடைய தலைமையிலும் ஈடுபட்டிருக்கின்றோம்.

திராவிட முன்னேற்றக் கழகமானாலும் — கழகம் அமைந்திருக்கின்ற இந்த அரசானாலும் நாங்கள் இருவரும் இன்றைக்கு அவைகளை நடத்திச் செல்கிறோம். எங்களை நாங்களே ஏமாற்றிக் கொள்ள விரும்பவில்லை; எங்கள் இருவரையும் தமிழ்ச் சமுதாயம் வழி நடத்திச் செல்கிறது என்கின்ற அந்த பேருண்மையை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம்.

நாங்கள் இந்தச் சமுதாயத்திற்காக வாழ்கிறோம்; திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்ற லட்சோப இலட்சம் தொண்டர்களுடைய இரத்தத்தின் விலை எங்களுக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான தோழர்கள் ஒடித்துத் தந்த எலும்பு விலை மதிப்பற்றது என்பதும் எங்களுக்குத் தெரியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலே தீக்குளித்துச் செத்தார்கள் — தமிழ் காக்க! இந்தியை வீழ்த்த — எட்டு பேர்! என்கின்ற பேருண்மை எங்களுக்குத் தெரியும்; அவர்களால் எல்லாம், உருவானது தான் இந்த பேரியக்கம்!

அவர்கள் சிந்திய இரத்தத்தால் — அவர்கள் வடித்த வியர்வையால் — அவர்கள் உகுத்த கண்ணீரால் இன்றைக்கு வான்முட்ட உயர்ந்து நிற்கிறது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாங்கள் உணராதவர்கள் அல்ல.

ஆகவேதான் எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போல — நாங்கள் உங்களை வழி நடத்திச் செல்கிறோம் என்பதற்கு மாறாக நீங்கள் எங்களை வழி நடத்திச் செல்கிறீர்கள்; விட்டுவிடுங்கள் என்று சொன்னாலும் நீங்கள் எங்களை விடப்போவதில்லை. அந்த அளவுக்கு உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் பாசப் பிணைப்பு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

## 'புறநானூறு கண்டது தமிழ்நாடு'

''நான் டில்லிக்குச் சென்றிருந்தபோது, பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன் ராமைச் சந்தித்து மாலை அணிவித்துப் பேச உட்கார்ந்ததும்—அவர் சொன்ன வார்த்தை இந்தப் போரில் தமிழ் வீரர்களின் பணி பாராட்டத்தக்கது'' என்பது தான். இதைக் கேட்டதும், நானே போர்க்களத்தில் இருந்து போராடி வெற்றி பெற்றது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது! புளகாங்கிதம் அடைந்தேன்; பூரிப்பால்—பெருமையால் உள்ளம் நிறைந்தது!

தமிழகத்தின் வீரம் இப்போது மட்டுமல்ல-பல்லாண்டுகளுக்கு முன்பே உலகப் புகழ் பெற்றது!

காளையை அடக்கியவன்—புலியை வீழ்த்தியவன்-வேழத்தை வென்றவனுக்கே மாலையிடுவேன்—என்றுகூறியவீரப் பெண்கள் வாழ்ந்த நாடு இது! 'சிறிவந்த புலியை முறத்தினால் துரத்தினாள்' என்ற வீரவரிகள் படைத்த நாடு இது!

மகன் போர்க்களத்திற்குப் போயிருக்கிறான்; தாயைப் பார்த்து, 'எங்கே உன் மகன்' என்று ஒருவன் கேட்டபோது தாய் சொன்னாள்— 'அந்தப் புலி போன இடம் தெரியவில்லை; ஆனால் அந்தப் புலி வாழ்ந்த குகை இதோ!' என்று ஒரு வீரத் தாயைப் பற்றிப் புறநானூறு பேசும்!

''அத்தகைய வீரவரலாறு படைத்த தமிழ் வீரர்கள், இப்போது நடந்த போரில், 'வெங்கொடுமைச் சாக்காட்டில் வீரம் விளைத்தார்கள்' என்று கேள்விப்பட்டு மகிழ்கிறோம்.''

—கலைஞர் மு. கருணாநிதி

(செங்கற்பட்டில் நடை பெற்ற கூட்டமொன்றில் பேசியது.)

## கத்தோலிக்க ஐக்கிய சங்க நிர்வாகிகள்

திருகோணமலை — மட்டக்களப்பு மேற்றிராசன கத்தோலிக்க ஐக்கிய சங்கத்தின் நிர்வாகிகள் வருமாறு: தலைவர் திரு. க. அ. ஜேசுதேவாஸ், உப — தலைவர்கள் திரு. ஜெகநாதன், திரு. எப். ஆர். ஞகல், திரு. கோவில் பிரம்பிக், காரியதரிசி திரு. செல்றற்ன் ஞகல், தனாதிகாரி திரு. எஸ். சவரிமுத்து.

திரு. க. சு. ஜேசுதேவாஸ் இளைப்பாறிய அரசினர் ஆசிரியரும் சிறந்த சமூக சேவையாளரும் தமிழரசுக்கட்சியின் பிரமாணிக்கமான ஊழியருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கட்சித் தலைவர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக்குப்போட்டியிட்டபோது, இந்தப் பூச்சாண்டியை கிளப்பினார்கள். அந்த நேரத்தில் நான் தலையிட்டு போட்டியை தவிர்க்க செய்தேன். இந்த முறை அப்படி நான் விரும்பவில்லை—ஏனென்னில் இந்தப் பூச்சாண்டி கொண்டு கட்சியை அழிக்கத்திரியும் குழுவினருக்கு நாம் எப்போதும் அடிபணிந்து போகப்படாது. ஆகையால் இந்தத் தேர்தலை நடக்கவிடுங்கள். தலைவரைத் தெரியும் சபை நீதியாக தீர்ப்புக் கூறும் என்பது எனது நம்பிக்கை. அது அமிர்தலிங்கத்தை தெரிந்தாலும் சரி, இராசதுரையைத் தெரிந்தாலும் சரி அதை நாம் ஏற்றுக் கொள்ளுவோம். ஜனநாயக முறை அது. இனிமேல் கிழக்கு மாகாணத்தவன் வட மாகாணத்தவன், என்ற வெருளி எங்கள் கட்சிக்குள் கிளம்பாமல் இருக்கட்டும்.''

—இவ்வாறு தமிழரசுத் தந்தை சுதந்திரன் நிருபருக்களித்த ஒரு போட்டியின் போது கூறினார்.

## துரோகியாய் நான், துஞ்சேன்!

இலங்கைத் தமிழர் நடத்தும் விடுதலை இயக்கத்தில் நான் கடந்த இருபது ஆண்டுகள் தொண்டனாக இருந்து வருகிறேன்.

இந்த நெடும்போரில் என்னுடைய இறுதி சாவாகவும் இருக்கலாம்.

அப்படியானால் ஒன்று மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரியும்:

வங்க நாட்டில் டாக்கா நகரைக் கைப்பற்றி தங்கள் தாயகத்தை விடுதலை செய்த பின்பு முக்திபாகினிப் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட துரோக வங்காளிகளைப் போல் நான் சாகமாட்டேன்: வங்கத்தை முக்தி பாகினிப் படைகள் கைப்பற்றுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு கொடிய பாகிஸ்தானிய தசாக்கர்களால் ஆற்றங்கரையில் சுட்டுக்கொல்லப்பட்ட வங்காள அறிஞர்களைப் போலவே நான் எங்கோ ஒரு புறத்தில் மடிந்து கிடப்பேன்!

— காசி ஆனந்தன்.

## அழிவிலிருந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண வகுப்பிற்கும் குறைந்த வகுப்புகளில் பயில்வோர்களில் ஒருசிலரே தமது தாய்மொழியான தமிழைக் கற்பதில் ஊக்கமுடையவர்களாய் உள்ளனர். இது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

'ஆனல், தற்போது நாட்டில் நடைமுறையிலிருந்து வரும் தாய்மொழி மூலம் கல்வி போதிக்கும் முறையினால் மாணவர்கள் ஓரளவாவது தமது மொழி அறிவு கொண்டவர்களாகத் திகழ முடிகிறது.

'இதே வேளையில் எமது நாட்டின் பல பாகங்களில் சிறுபான்மை இன மக்களின் மொழியான தமிழ்மொழியில் நடாத்தப்படும் வகுப்புகளுக்கு மூடு விழாக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. தமிழ் வகுப்புகளுக்குப் பதிலாக சிங்கள வகுப்புகள் தலை தூக்குகின்றன.

'இது பெரும் பாரதூரமான ஒரு விடயமாகும். இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானல் புராதன மொழியான தமிழ்மொழி இந்த நாட்டிலிருந்து படிப்படியாக அழிந்தொழிந்து போய்விடும்; இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது தமிழ்ப் பெற்றோர்களின் தலையாய கடனாகும்.'

—இவ்வாறு அக்குவைனஸ் பல்கலைக் கழக கல்லூரி தமிழ் மன்றத்தினால் நடத்தப்பட்ட தமிழ்க் கலைவிழாவில் பேசிய வண பிதா. சுவைநிதி டொன் பீற்றர் தமிழ் பெற்றோர்களை வேண்டியுள்ளார்.

## மாநாட்டு படங்கள் தேவை!

யாழ் நகரில், சனவரி 29, 30ம் நாட்களில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் சிறப்பு மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படங்கள் தேவைப்படுகின்றன. படம் எடுத்த புகைப்பட பிடிப்பாளர்கள் உடனே அனுப்பி உதவுக. ஏற்கும் படங்களுக்கு பணம் அனுப்பி வைக்கப்படும்.

— ஆசிரியர்

## கைதடியில் எட்டாவது சைவ மாநாடு

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் எட்டாவது சைவ மாநாடு கைதடி மூர்த்தியாவத்தை வீதியில் அடுத்த மாதம் 18ம் 19ம் 20ம் திகதிகளில் நடைபெற விருக்கின்றது. மூன்று தினங்களும் கதாப்பிரசங்கங்கள் சொற்பொழிவுகள் சமய நாடகம், நடனம் என்பன நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன: மாநாட்டை முன்னிட்டு சைவத்தொண்டன் சிறப்பிதழும் வெளியிடப் படவிருக்கின்றது.

## நாகா பெயரில் பலிபூசை!

அமரர் கலாநிதி இ. மு. வி. நாகநாதன் அவர்களின் ஆன்ம சாந்திக்காக 17-2-72 காலை ஆறு மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலிப் பூசை நிறைவேற்றப்படும். இதில் பங்குபற்றி இவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டுமாறு இல்லத்தினர் வேண்டியுள்ளனர்.

## தில்லித் தமிழ்சங்க வெள்ளி விழா மலர்

தில்லித் தமிழ் சங்க வெள்ளிவிழா மலர் எங்கே எப்படிப் பெறலாமெனக் கேட்டு பல வாசகர்கள் நமக்கு எழுதியுள்ளனர். இந்த மலரை ஈழத்தில் பெறமுடியாது. சென்னை, சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகமே இதை விற்பனை செய்கிறது. வசதியுள்ளவர்கள் அங்கிருந்தே இம்மலரைப் பெறலாமென்பதை அறியத்தருகிறோம்.

—ஆர்


அருள் விருந்து

''மிகைப்பட்ட செல்வத்தைச் சேகரிப்பவன் தனது அழிவுக்கு உபாயம் தேடுகிறான்.'' —தர்மசக்கரம்.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 15 அனுப்பி விளக்கப்படங்களுடன் கூடிய யோகக்கலை என்னும் சிறந்த நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் திரைகளில் காட்சியளிக்கின்றது

ரீகல் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டுநகர்) — ஹெம்ஸ்லி (கொழும்பு)

2வது வாரம்



ஜெய்சங்கர் — சகுந்தலா
மனோகர் — ஆனந்தன்
—நடித்த—
சி. ஐ. டி.
சங்கர்

5வது வெற்றி வாரம்
கெப்பிட்டல் — பிளாசா
(கொழும்பு) (வெள்ளவத்தை)

சிவாஜி, பத்மினி,
ஸ்ரீகாந்த், நாகேஷ்,
தங்கவேலு, ராகவன்,
—நடித்த—
சிவாஜி பிலிம்ஸ்



வியட் நாம் வீடு

---

சிலோன் தியேட்டர்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது

2வது மாதமாக காட்சி தருகின்றது

செல்லமகால்
(கொட்டாஞ்சேனை)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, நாகேஷ்,
மற்றும் பலர் நடித்த

சுமதி என் சுந்தரி

---

சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது



8வது வெற்றி வாரம்
சென்ட்ரல் — ராணி
(மருதானை) (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்
சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்ட்மன் கலர்) சவாலே சமாளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org